# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே




செவ்வாய்க்கிழமை 25.01.2022 supeedsam.com supeedsam@gmail.com

## திருமலை மாவட்டத்ல் 5 ஆம் தர மற்றும் உயர்தர பரீட்சை கடமைகளிலும் அரசியல் தலையீடு

### குற்றம் சாட்டுகிறார் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் எம்.பி

சுயாதீனமாகச் செயற்பட வேண்டிய பரீட்சைக் கடமை நியமனங்களிலும் அரசியல் தலையீடு இடம்பெறுவது இந்த அரசின் கேவலமான செயல்களில் ஒன்றாகும் எனத் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

திருகோணமலை மாவட்டத்தில் 5ஆம் தர மற்றும் உயர்தரப் பரீட்சைக் கடமைக்காக நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன. இந்த நியமனங்களில் வழமைக்கு மாறாக இனரீதியான புறக்கணிப்புகள் இடம்பெற்றுள்ளதாக அதிபர், ஆசிரியர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

02 ஆம் பக்கத்தில்...



## பாடசாலைகளில் அதிகரிக்கும் கோரோனா

நாட்டில் உள்ள பாடசாலைகளில் அதிகளவான கொரோனா நோயாளர்கள் கண்டறியப்பட்டு வருவதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே, மூடப்பட்ட இடங்கள் மற்றும் சிறிய வகுப்பறைகளில் உள்ள பாடசாலை மாணவர்கள்

02 ஆம் பக்கத்தில்...

## அரசாங்கம் விழ முன் நாடு விழுந்து விட்டது!



நாம் முன்னோக்கி சென்று, இந்த காட்டாட்சியை வீழ்த்த வேண்டும் என்றால் சஜித் பிரேமதாசவும், சம்பிக்க ரணவக்கவும் முரண்பாடுகளை மறந்து கரங்கோர்க்க வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி விரும்புகிறது என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் அமைந்துள்ள ஊழல் எதிர்ப்பு குழு அங்கத்தவர்களை விசாரிக்கும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் இன்று முன் சாட்சியம் அளித்து விட்டு, ஊடகங்களிடம் உரையாற்றிய

02 ஆம் பக்கத்தில்...

## எரிபொருள் நெருக்கடியை சமாளிக்க போக்குவரத்து தடை

### அரசிற்கு அவசர யோசனையை முன்வைத்துள்ள உதய கம்மன்பில



தற்போது நிலவும் கடுமையான எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் எரிபொருள் பாவனையை குறைப்பதற்கான அவசர யோசனையை எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில அரசிடம் சமர்ப்பித்துள்ளார்.

எரிபொருள் விலை சூத்திரத்தை உடனடியாக அமுல்படுத்துமாறும், கொழும்புக்கு வரும் வாகனங்களை மட்டுப்படுத்தவும் வாரத்தில் ஒரு நாள் காணொளி தொழில்நுட்பம்

02 ஆம் பக்கத்தில்...

## மட்டக்களப்பில் சுகிர்தராஜனின் நினைவு தினத்தில் நீதி கோரி ஆர்ப்பாட்டம்

(ரக்ஸனா)

சுகிர்தராஜனின் நினைவு தினத்தில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வேண்டி மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்.

2006ஆம் ஆண்டு திருமலையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் எஸ்.சுகிர்தராஜனின் 16வது ஞாபகார்த்த தின நிகழ்வு திங்கட்கிழமை(24) மட்டக்களப்பு

02 ஆம் பக்கத்தில்...




## மகாலிங்கம் பாலசுந்தரம் படுகொலை வழக்கு;

## வியாழேந்திரனின் தொலைபேசி அழைப்பு தொடர்பில் விசாரணை செய்ய கோரிக்கை



(மட்டுநிருபர்

கொலை செய்யப்பட்ட மகாலிங்கம் பாலசுந்தரத்தின் கொலை தொடர்பில் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் கையடக்க தொலைபேசி அழைப்பு

02 ஆம் பக்கத்தில்...

## ஈஸ்டர் தாக்குதல் விசாரணையில் தீர்வு இல்லை; வழக்கை ஐ.நா.விற்கு கொண்டு செல்ல பேராயர் தீர்மானம்



ஈஸ்டர் தாக்குதல் வழக்கை சர்வதேச அளவில் எடுத்துச் செல்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராந்துவருவதாக கொழும்பு பேராயர், கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## தொடர்ந்து மின்சாரம் வழங்கப்படும் என்பதற்கான உத்தரவாதத்தை வழங்க முடியாது

தொடர்ந்து மின்சாரம் வழங்கப்படும் என்பதற்கான உத்தரவாதத்தை வழங்க முடியாது என சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...






# ஒரு தலைமுறைக்கு அதிகமான 250 குடும்பங்களின் காணிகள் அரசுடமை : மக்கள் ஆர்ப்பாட்டத்தில்





(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை நிலாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரசூல்நகர் கிராமத்தில் சுமார் 250 குடும்பங்கள் ஒரு தலைமுறைக்கு அதிகமாக வசித்து வரும் 68 ஏக்கர் காணியை சுற்றுலாத்துறை வர்த்தமானி அறிவித்தல் மூலம் உரிமையாக்கிக் கொண்டு உள்ளது.

இதனை எதிர்த்து குறித்த மக்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த நிலையில் சுற்றுலாத் துறைக்கு சாதகமாக தீர்ப்பு கிடைத்துள்ளது.

எனவே நேற்று (24) திருக்கோணமலை நீதி மன்றத்தை



சேர்ந்த அதிகாரிகளும், போலீசாரும், சுற்றுலாத் துறை அதிகாரிகளும் குறித்த காணிகளை கையகப்படுத்த சென்ற பொழுது மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வழியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நீதிமன்ற அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றதுடன், கிராம சேவகர் மக்களுடன் கலந்துரையாடிய போதும் வாய்த் தர்க்கங்கள் இடம்பெற்று சற்று அமைதியின்மை ஏற்பட்டது .

பின்னர் அவ்விடத்திற்கு பொலிஸார் வரவழைக்கப்பட்டதுடன் ஆர்ப்பாட்டக்காரர்களுக்குமிடையில் முர்கநிலை வழுவடைந்ததையடுத்து அதிகாரிகள் அவ்விடத்திலிருந்து கலைந்து சென்றமை குறிப்பிடத்தக்கது

## மட்டக்களப்பில் சுகிர்தராஜனின் நினைவு தினத்தில் நீதி கோரி

காந்தி பூங்கா முன்றலில் அமைந்துள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் ஞாபகார்த்த நினைவுத் தூபியில் நடைபெற்ற துடன் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வேண்டி மட்டக்களப்பில் ஆர்ப்பாட்ட மும் இடம்பெற்றது.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் இ.தேவஅதிரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட முன்னாள நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞா.சிறிநேசன், மட்டக்களப்பு மாநகர சபையின் பிரதி முதல்வர் க.சத்தியசீலன். இணையத்தள ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் பெடிகமகே, மற்று ஏனைய அரசியல் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சிவில் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது சுகிர்தராஜனின் உருவப்படத்திற்கு சிரேஸ்ட்ட ஊடகவிலாளர் புத்திரசிகாமணி, மற்றும், முன்னாள் ஊடகவியலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பா.அரியநேத்திரனும் இணைந்து மலர்மாலை அணிவித்தனர். பின்னர் 16 நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டு, மலரஞ்சலி செலுத்தி, அகவணக்கமும் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து இதன் போது கலந்து கொண்டோர், படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வேண்டிய கோசங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். பின்னர் நினைவு உரைகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்விற்கு வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு ஊடக அமைப்புகளின் ஒத்துழைப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## திருமலை மாவட்டத்ல் 5 ஆம் தர மற்றும் உயர்தர

இந்த பரீட்சைக் கடமை நியமனங்களில் வழமையாகப் பின்பற்றப்பட்டு வந்த இனச் சமநிலை பின்பற்றப்படவில்லை. முஸ்லிம் அதிபர், ஆசிரியர்கள் இம்முறை பரீட்சைக் கடமைகளில் ஓரங்கட்டப்பட்டுள்ளனர்.

பரீட்சைக் கடமை வழங்கப்பட்ட கிண்ணியா, மூதூர், தோப்பூர் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் புல்மோட்டை, கோமரங்கடவெல போன்ற தூரப் பிரதேசங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை, குச்சவெளி போன்ற பிரதேசத்தவர்களே வழமையாக இப்பகுதி பரீட்சைக் கடமைக்கு நியமிக்கப்பட்டனர். இம்முறை சிரமப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் இந்த நிலை திட்டமிட்டு மாற்றப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

வழமையாக வலயக் கல்விப் பணிப்பாளர்களினால் வழங்கப்படும் பெயர் பட்டியல்களிலிருந்தே பரீட்சைக் கடமை நியமனங்கள் செய்யப்பட்டன. இவ்வாறு செய்வதனூடாக சிரேஸ்டத்துவம், தகைமை என்பன கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கும்.

இம்முறை இந்த நிலை பின்பற்றப்படவில்லை. வலயக் கல்விப் பணிப்பாளர்களின் பெயர் பட்டியலுக்கு வெளியே நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன.

அரசியல் ரீதியாக வழங்கப்பட்ட பெயர்ப் பட்டியலிலிருந்தே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டதாக கூறப்படுகின்றது. அதிபர், ஆசிரியர்களின் சிரேஸ்டத்துவம் கவனத்தில் கொள்ளப்படாமல் முதலாந்தர அதிபர், ஆசிரியர்கள் உதவி மேற்பார்வையாளர்களாக இம்முறை நியமிக்கப்பட்டுள்ளனர்.

வழங்கப்பட்ட நிமயனக் கடிதங்களில் கூட பெயர், தரம், பாடசாலை என்பன சரியாகக் குறிப்பிடப்படாது பல்வேறு குறைபாடுகளுடன் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கலந்து கொண்டோரிடமிருந்து ஒப்பம் பெறப்பட்ட போது பரீட்சை நிலையமோ மேற்பார்வையாளர், உதவி மேற்பார்வையாளர் பெயர்களோ குறிப்பிடப்படாது ஒப்பங்கள் பெறப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

பரீட்சைக் கடமை தொடர்பாகத் தெளிவுபடுத்தும் கூட்டம் பகல் 12.00 வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தாலும் மாலை 5.00 வரை அது நடத்தப்பட்டுள்ளது. கலந்து கொண்டவர்களுக்கு மதிய உணவு கூட வழங்கப்படவில்லை.

இக்கூட்டத்தில் வைத்தும் நியமனங்களில் விருப்பு வெறுப்புகள் காட்டப்பட்டு மாற்றங்கள் செய்யப்பட்டதாகக் கலந்து கொண்டோர் புகார் தெரிவிக்கின்றனர்.

ஆளுநர் செயலகத்திலிருந்து வந்த அறிவுறுத்தல்களுக்கமைய பரீட்சைக்கான பிராந்திய இணைப்பாளர் செயற்பட்டதாலேயே இவ்வாறான குறைபாடுகள் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் பரீட்சைக் கடமைகளில் இனரீதியான புறக்கணிப்புகள் இடம்பெற்றாலும் 20ஆம் திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்து, வரவு செலவுத்திட்டம், போர்ட் சிட்டி சட்ட மூலம் எனப் பல விடயங்களில் அரசுக்கு ஆதரவாக இருந்து வரும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு இந்த விடயம் அறிவிக்கப்பட்டிருந்தாலும், அவர்கள் இந்த விடயம் குறித்து எதுவித நடவடிக்கையும் தங்களால் எடுக்க முடியாது என கை விரித்ததாக சில அதிபர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நேர்மையாக நடக்க வேண்டிய பரீட்சைக் கடமைகளில் இவ்வாறான தலையீடுகளும், இனரீதியான புறக்கணிப்புகளும் இடம்பெற்றால் பரீட்சைத் திணைக்களத்தின் நம்பகத்தன்மை கேள்விக்குறியாகிவிடும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் என தெரிவித்துள்ளார்.






## தொடர்ந்து மின்சாரம் வழுங்கப்படும் என்பதற்கான உத்தரவாதத்தை வழுங்க முடியாது

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை நடைமுறையில் நடைமுறைப்படுத்த தவறியமையே தற்போதைய நிலைமைக்கு காரணம் என கூறினார்.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர், மின்சார உற்பத்திக்கு எரிபொருள் வழங்கப்படும் என எரிசக்தி அமைச்சர் கூறியுள்ளார்.

இருப்பினும் தொடர்ந்தும் மின்சாரம் வழங்கப்படும் என்பதற்கான உத்தரவாதத்தை வழங்க முடியாது என மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

தற்போதைய நிலைமைக்கு எவரையும் குறை கூற முடியாது என்றும் இந்த விடயம் தொடர்பான வேலைத்திட்டத்தை வகுக்கத் தவறியதன் விளைவே இது என்றும் அவர் குறிப்பிட்டார்.

2030 ஆம் ஆண்டளவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி 70 சதவீதமாக அதிகரிக்கப்படும் என அரசாங்கத்தின் கொள்கை பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளதாக அமைச்சர் அமரவீர தெரிவித்தார்.

## ஈஸ்டர் தாக்குதல் விசாரணையில் தீர்வு இல்லை;

மக்களுக்கு நீதி கிடைக்க தங்களால் முடிந்தவரை முயற்சித்ததாவும் இந்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்துவிட்டன என்றும் அவர் கூறினார்.

எனவே சர்வதேசத்திற்குச் செல்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதாகவும் அதற்கும் அர்த்தம் ஐக்கிய நாடுகள் சபைக்கு செல்வது என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் இந்த வழக்கை முன்னெடுத்துச் செல்வதற்காக இலங்கையுடன் தொடர்பு வைத்திருக்கும் சக்தி வாய்ந்த நாடுகளையும் தாம் அணுகவுள்ளதாக கொழும்பு பேராயர் குறிப்பிட்டார்.

இவ்வளவு நாட்களாக உள்நாட்டில் நீதி கிடைக்கும் என நம்பியமை காரணமாக மேற்கூறிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றும் கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை குறிப்பிட்டார்.

## மகாலிங்கம் பாலசுந்தர படுகொலை வழக்கு;

தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும் என்று மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டது. இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் வீட்டின் முன்னாள் சுட்டுக்கொல்லப்பட்ட மகாலிங்கம் பாலசுந்தர படுகொலை தொடர்பில் நகர்த்தல் பத்திரம் மூலம் குறித்தவழக்கானது விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் மற்றும் சட்டத்தரணி என். கமலதாஸ் ஆஜராகியிருந்தனர். குறித்த வழக்கானது நீதிவான் நீதிமன்றில் நீதிபதி ஏ.சி. றிஸ்வான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சம்பவம் நடைபெற்ற வேளையில் இராஜாங்க அமைச்சர் தன்னுடைய வீட்டிலிருந்தார் என்றும் அதன் பின்னரே அவர் அங்கிருந்து வெளியேறிச் சென்றார் என்ற தகவலும் இருக்கும் காரணத்தினால் இரண்டு விடயங்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்க வேண்டும் என்று நீதிவானிடம் கோரியிருக்கின்றோம்.

இராஜாங்க அமைச்சர் எப்போது வீட்டை விட்டு வெளியேறினார் என்பதை அறிவதற்காக வீதிகளில் உள்ள சிசிரிவி காட்சிகள் விசாரணை செய்யப்பட வேண்டும்.

குறித்த வழக்கு தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முறையாக முன்னெடுக்காத காரணத்தினால் குறித்த வழக்கானது கரடியனாறு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக நீதிவான் தெரிவித்ததாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு முதன் முதலில் தொடர்பினை ஏற்படுத்திய இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் அந்த அழைப்பை எடுத்த இடம் மற்றும் வழியில் இருந்த சிசிரிவி காணொளிகளை உடன் பரிசீலனை செய்யவேண்டும் என்ற கோரிக்கை சட்டத்தரணிகளினால் முன்வைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

குறித்த வழக்கானது எதிர்வரும் 03 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## அரசாங்கம் விழ முன் நாடு விழுந்து விட்டது!

மனோ கணேசன் எம்பி மேலும் கூறியதாவது, வழமையாக அரசாங்கங்கள் பதவிக்கு வரும். பின்னர் அது விழும். அதையடுத்து புதிய அரசாங்கம் பதவிக்கு வரும். அதுவும் விழும். இன்னொரு அரசாங்கம் வரும். இதுவே வழமை. ஆனால், இன்று அரசாங்கம் விழுவதற்கு முன் நாடு விழுந்து விட்டது. அண்டை நாடுகளிடம் கெஞ்சி கூத்தாடி கைமாற்று வாங்கி, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, பெருங்கடன்களின் மீள் செலுத்தும் தொகையை செலுத்தி காலத்தை ஓட்டும் நிலைமைக்கு நாடு விழுந்து விட்டது.

ஆகவே, புதிதாக கட்டி எழுப்ப வேண்டியது புதிய அரசாங்கம் என்பதை விட, புதிய நாடு என்றுதான் சொல்ல வேண்டும். ஆகவே இன்று இந்நாட்டின் அரச எதிர்ப்பு சக்திகள் அனைத்தும் கரங்கோர்க்க வேண்டும். அதற்கு முன் ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாசவும், 43ம் படையணி தலைவர் பாடலி சம்பிக்க ரணவக்கவும் கரங்கோர்க்க வேண்டும்.

இல்லை, இல்லை என்ற கூக்குரலை விட இந்நாட்டில் இன்று எதுவும் இல்லை என்றாகி விட்டது. எண்ணெய் இல்லை. எரிவாயு இல்லை. பால்மா இல்லை. உரம் இல்லை. மருந்துகள் இல்லை. எதுவும் இல்லை. சொல்லப்போனால் இந்நாட்டில் இன்று அரசாங்கமே இல்லை.

உரம் இல்லை என்று கையை விரித்து மன்றாடும் விவசாயிகளிடம் ஜனாதிபதி கோதாபய ராஜபக்ச, உங்கள் நிலங்களில் நெல் விளைவிக்க முடியாவிட்டால், பாசிபயறு விளைவியுங்கள் என்று கூறுகிறார். இது, பாண் இல்லாவிட்டால், கேக் சாப்பிடுங்கள் என்று சொன்ன பிரான்ஸ் நாட்டு கொடுங்கோல் அரசியை ஞாபகப்படுத்துகின்றது.

வெள்ளைபூண்டு ஊழலை கண்டு பிடித்து, அம்பலப்படுத்திய முன்னாள் நுகர்வோர் அதிகார சபை பணிப்பாளர் துசான் குணவர்தன, வெளிநாடு செல்ல முடியாமல் தடுக்கப்பட்டுள்ளார். இது என்ன கோலம்? குற்றவாளிகள் சுதந்திரமாக சுற்றி திரிவது ஒருபுறம் இருக்க, குற்றவாளிகளை கண்டு பிடிக்கும் நடவடிக்கையை எடுத்த நேர்மையான அதிகாரிகள் தண்டிக்கப்படுகிறார்கள்.

இன்று இங்கே ஊழல் எதிர்ப்பு குழு என்று ஏன் முன்னாள் அரசாங்க பிரமுகர்கள் மீது நடவடிக்கை எடுத்தீர்கள் என என்னை கேட்டு தொந்தரவு செய்கிறார்கள். ஊழல் செய்தவர்கள் மீதான வழக்குகளை சட்டமா அதிபர் திணைக்களம் மூலம் வாபஸ் வாங்கி விட்ட நிலையில், ஊழல் செய்தவர்கள் எல்லாம் சுதந்திரமாக திரியும் போது, ஏன் நீங்கள் நடவடிக்கை எடுத்தீர்கள் என இவர்கள் என்னை கேட்கிறார்கள்.

நான் மனோ கணேசன். தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவன். எங்கள் கூட்டணி, எவருக்கும் எடுபிடி வேலை செய்யாத, ஒரு பலமான, தைரியமுள்ள சுதந்திரமான கட்சி. இது மக்களின் கட்சி. எம்மை எவரும் பயமுறுத்த முடியாது. நாங்கள் பயந்து ஒதுங்க மாட்டோம். அதை இன்னமும் பலமாக நாம் வளர்ப்போம். அது ஒன்றே எமது பலம்.

## எரிபொருள் நெருக்கடியை சமாளிக்க

மூலம் பாடசாலைகளை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அத்தோடு அரச நிறுவனங்களின் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் மற்றும் மாநாடுகளுக்கு அதிகாரிகளை அழைப்பதை மட்டுப்படுத்தவும், பிரதேச செயலாளர்களை கொழும்புக்கு வரவழைப்பதை மட்டுப்படுத்தவும் அவர் யோசனையை முன்வைத்துள்ளார்.

எரிபொருள் பாவனையை குறைப்பதற்காக எரிபொருட்களின் விலைகள் கணிசமாக அதிகரிக்கப்பட்ட போதிலும், தேவை தொடர்ந்து அதிகரித்து வருவதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

உல்லாசப் பயணங்கள், உறவினர்கள் வருகை போன்ற பயணங்கள் அதிகரித்துள்ளமையும் எரிபொருள் பாவனை அதிகரிப்புக்கு காரணம் என்றும் அமைச்சர் உதய கம்மன்பில குறிப்பிட்டார்.

மேலும் பொது போக்குவரத்திற்கு பதிலாக தனியார் வாகனங்களின் பயன்பாடு அதிகரிப்பு மற்றும் எரிவாயு பற்றாக்குறை காரணமாக மண்ணெண்ணெய் பயன்பாடு அதிகரிப்பு ஆகியவை எரிபொருள் நுகர்வு அதிகரிப்பதற்கு பங்களித்துள்ளன என சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, எரிபொருள் நெருக்கடியுடன் ஏற்பட்டுள்ள மின்சார நெருக்கடியை சமாளிப்பதற்கான யோசனையொன்றை மின்சக்தி அமைச்சு அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளதாக அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## பாடசாலைகளில் அதிகரிக்கும் கொரோனா

மீது கவனம் செலுத்தப்பட வேண்டும் என அந்தச் சங்கத்தின் தலைவரான உபுல் ரோஹன தெரிவித்தார்.

புத்தளத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். நிறைய மாணவர்கள் மற்றும் போதிய இடவசதி இல்லாத வகுப்பறைகளில் இருந்து அதிக எண்ணிக்கையிலான நோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர் என்றும் இது கொத்தணிகளுக்கு வழிவகுக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெற்றோர்களும் ஆசிரியர்களும் பாடசாலை மாணவர்கள் தொடர்பாக அவதானமாக இருந்தால் இவ்வாறான நிலைமையை ஓரளவு தவிர்க்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அட்டப்பளத்திலுள்ள ஒரேயொரு பாடசாலையும் மூடப்படும் அபாயம்!
## ஆசிரியர் இன்மையே காரணமேன்கிறது பாடசாலைச்சமுகம்.

(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனைவலயத்துக்குட்பட்ட, நிந்தவூர் கோட்டத்தின்கீழுள்ள அட்டப்பளத்திலுள்ள ஒரேயொரு தமிழ்ப்பாடசாலையும் மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாக அங்குள்ள பாடசாலைச்சமுகம் கவலை தெரிவிக்கிறது.

அங்குள்ள அட்டப்பளம் விநாயகர் வித்தியாலயமே இவ்விதம் மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது. ஆசிரியர் போதுமானளவு இன்மையே இதற்கான காரணம் என சமுகம் குற்றம்சாட்டுகிறது.

136மாணவர்கள், 14ஆசிரியர்களுள்ள விநாயகர் வித்தியாலயத்தில் குறிப்பாக முக்கிய பாடமாகக்கருதப்படும் கணிதம் விஞ்ஞானம் போன்ற கருப்பாடங்களுக்கு ஆசிரியர் இல்லை.

கணிதபாடத்திற்காக இருந்த ஒரேயொரு ஆசிரியர் கடந்த இருவருடங்களுக்கு முன்னர் இடமாற்றம்பெற்றுச் சென்றிருந்தார். அன்றிலிருந்து அந்த மாணவர்களுக்கு கணிதம் கற்கும் வாய்ப்பு உரிமை மறுக்கப்பட்டிருந்தது.

கடந்த மாதம் விஞ்ஞானபாடத்திற்கெனவிருந்த ஒரேயொரு ஆசிரியரும் மாகாணத்திலிருந்து இடமாற்ற உத்தரவுபெற்று இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ளார்.

ஆக, பின்தங்கிய பிரதேசத்திலுள்ள ஒரேயொரு பாடசாலையையும் இழுத்துமூடப்படுவதற்கு இவ்விடமாற்றங்கள் செய்யப்படுகின்றனவா? என அச்சமுகம் கேள்வியெழுப்புகிறது.

பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் ஆலயங்கள் உள்ளிட்ட பொதுநலஅமைப்புகள் இதுவிடயத்தில் போர்க்கொடி தூக்கியுள்ளன. தேவையான ஆசிரியர்கள் நியமிக்கப்படாவிடின் திவிரபோராட்டமொன்றை முன்னெடுக்கப்போவதாகவும் சூளுரைத்துள்ளன.

# மட்டக்களப்பு மாவட்டத்தின் சேதன பசளை உற்பத்தி தோடர்பான செயலமர்வு




ஜனாதிபதியின் எண்ணக்கருவில் உதித்த சுபிட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்துக்கு அமைவாக பசுமையான நஞ்சற்ற நாடு எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு மாவட்ட மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் இயற்கை உர உற்பத்தி தொடர்பான செயலமர்வு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்க.கருணாகரன் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது கருது தெரிவித்த அரசாங்க அதிபர் விவசாய துறையில் உள்ளவர்கள் விவசாயிகளின் உற்பத்தியை அதிகரிப்பதை நோக்காக கொண்டு செயற்படவேண்டும். இவ்வாறு செயற்படுவதன்மூலம் அதிக விளைச்சலை பெற முடியும். இயற்க்கை உரத்தினைதுரிதமாகவும் வினைத்திறனாகவும் உற்பத்திசெய்ய வேண்டும் இதற்க்காக இராணுவத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றுள்ளது.. பெரும்போகத்தின் போது இயற்கை உரத்தினை மட்டும் பாவனைக்கு விவசாயிகளுக்கு சிபாரிசு செய்யப்பட்டது. இம்முறை இரசாயன உரம் தனியாரினால் விற்பனை செய்யப்படவுள்ளது இரசாயன உரப்பாவனையினால் தொற்றாநோய் அதிகளவில் எற்ப்படுகிறது. மற்றும் எமது நாட்டின் உணவு பாதுகாப்பினை அனைத்து உத்தியோகத்தர்களும் உறுதிப்படுத்தவேண்டும் என தெரிவித்தார்.

இவ் நிகழ்வின்போது மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷினி ஸ்ரீகாந்த், பசுமை உற்ப்பத்தி செயலணி அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் பிரிகேடியர் டிலுக்க பண்டார, மாவட்ட விவசாய பணிப்பாளர் ,பிரதி விவசாய பணிப்பாளர் , கமநல சேவை ஆணையாளர் , பணிப்பாளர்கள்,இராணுவ அதிகாரிகள் ,விவசாய போதனா ஆசிரியர்கள் , பெரும்பாக உத்தியோகத்தர்கள் , மற்றும் விவசாய துறையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் , மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# மீராவோடை மீரா விளையாட்டுக் கழகத்தின் சீருடை அறிமுக நிகழ்வும் T20 கிரிக்கேட் போட்டியும்




(எச்.எம்.எம்.பர்ஸான்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மீராவோடை மீரா விளையாட்டுக் கழகத்தின் சீருடை அறிமுக நிகழ்வும், சிநேகபூர்வ கூ20 கிரிக்கெட் போட்டியும் ஞாயிற்றுக்கிழமை (23) ஓட்டமாவடி அமீர் அலி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

மீராவோடை மீரா விளையாட்டுக் கழக தலைவர் ஐ.எம்.றிஸ்வின் தலைமையில் நடைபெற்ற கூ20 கடின பந்து போட்டியில் மீராவோடை மீரா, சாய்ந்தமருது பிலையிங் கோர்ஸஸ் ஆகிய அணிகள் பங்குபற்றின.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய மீரா அணியினர் 13 ஓவரில் அனைத்து விக்கட்டுக்களையும் இழந்து %3 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது பிலையிங் கோர்ஸஸ் அணியினர் 9 ஓவரில் 6 விக்கட்டுக்களை இழந்து %4 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றனர்.

இப் போட்டியில் வெற்றி பெற்ற சாய்ந்தமருது பிலையிங் கோர்ஸஸ் அணிக்கு ஓட்டமாவடி ஸெய்க்கா ஹோல்ட் ஹவுஸ் நிறுவனத்தால் பத்தாயிரம் ரூபாய் பணப்பரிசும் வெற்றிக் கிண்ணமும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக சட்டத்தரணி எம்.எம்.எம்.ராசிக் கலந்து கொண்டதுடன், விசேட அதிதியாக கல்குடா சலஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக தலைவர் கே.பி.அப்துல் ஜப்பார் மற்றும் பிரதேச விளையாட்டுக் கழக தலைவர்கள், வர்த்தக நிலைய உரிமையாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# கிழக்கின் ஆளுநர் தலைமையில் 2021 - 2022 ஆண்டுக்கான மீளாய்வுக்கூட்டம்




(பைஷல் இஸ்மாயில்)

கிழக்கு மாகாண முதலமைச்சின் கீழ் உள்ள உள்ளூராட்சித் திணைக்களம், வீடமைப்பு அதிகார சபை, சுற்றுலாப் பணியகம், வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை, தொழிற்துறை திணைக்களம், கிராம அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவற்றினால் முன்னெடுக்கப்பட்ட மற்றும் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் பற்றிய மீளாய்வுக் கூட்டம் நேற்று (24) கிழக்கு மாகாண முதலமைச்சின் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் முதலமைச்சின் கீழுள்ள உள்ளூராட்சித் திணைக்களம், வீடமைப்பு அதிகார சபை, சுற்றுலாப் பணியகம், வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை, தொழிற்துறை திணைக்களம், கிராம அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவற்றின் தலைவர்கள் பற்கேற்றிருந்தனர்.

குறித்த திணைக்களங்களினால் கடந்த வருடம் 2021 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்திகள் தொடர்பாக மிக விரிவாக கலந்துரையாடப்பட்ட இதேவேளை இவ்வருடம் 2022 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்திகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இதன்போது முதலமைச்சின் செயலகஅனைத்து அலுவலகப் பிரிவுநடவடிக்கைகளின்செயற்பாடுகளை கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் பார்வையிட்டு அது தொடர்பாக ஆராய்ந்தமையும் குறிப்பிடத்தக்கது. இதன்போது முதலமைச்சின் செயலாளர் (திருமதி) யூ.ஆர்.ஏ.ஜெலீல், பிரதம கணக்காளர் எம்.ஐ.எம்.முஸ்தபா, திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.பாயிஸ், நிருவாக உத்தியோகத்தர் முஹம்மட் றியாஸ் உள்ளிட்ட ஆளுநரின் அலுவலக உத்தியோகத்தர்கள் பலர் பங்கேற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மேத்தனப்போக்கான அபிவிருத்தியால் மக்கள் அசௌகரியம்

## வாகனங்கள் பழுதாகும் நிலை தோன்றியுள்ளது




(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்டம் மாளிகைக்காடு கிராமம் ஆரம்பிக்கும் தேவாலய சந்திமுதல் காரைதீவு பிரதேச செயலக முடிவு வரை வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மேற்கொண்ட வீதியபிவிருத்தியில் சீரின்மை காரணமாக வாகனங்கள் பழுதாகும் நிலை ஏற்பட்டுள்ளதாக வாகன சாரதிகளும், பாதசாரிகளும் விசனம் தெரிவித்து வருகின்றனர்.

கடந்த பல மாதங்களாக மேற்குறித்த பிரதேசத்தில் வீதியை இருவழிபாதையாக மாற்ற வீதியின் நடுவில் கொங்கிரீட் தூண்களை கொண்டு பிரித்திருந்த நிலையில் இரவுவேளைகளில் அதன்மூலம் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை அனுபவித்து வந்ததுடன் விமர்சனங்களும் எழுந்தது. அதனையடுத்து வீதியை அகலமாக்குவதற்கு தீர்மானித்த வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் அவசர அவசரமாக காபட் வீதியின் மேல் மேலும் அஸ்பால்ட் இட்டு சீரணமுறையில் மட்டப்படுத்தாமல் விட்டதன் காரணமாக மாளிகைக்காடு கிராமம் ஆரம்பிக்கும் தேவாலய சந்திமுதல் காரைதீவு பிரதேச செயலக முடிவு வரை வீதி கடுமையானமுறையில் பழுதடைந்து வாகனங்களை சீரான வேகத்தில் செலுத்த முடியாத நிலை உருவாகியுள்ளதுடன் வாகனங்களும் அலறி பழுதாகும் நிலை தோன்றியுள்ளது.

கல்முனை அக்கறைப்பற்றை இணைக்கும் குறித்த வீதி நெடுந்தூரம் பயணிப்பவர்களுக்கு பிரதான வீதியாக அமைந்துள்ளதுடன் ஒருநாளைக்கு சுமார் 8000 க்கும் அதிகமான வாகனங்கள் பயணிக்கும் வீதியாக அமைந்துள்ளது. இதனால் இவ்வீதியை பாவிக்கும் மக்கள் கடுமையான சிக்கல்களை அனுபவித்து வருவதனால் வீதி அபிவிருத்தி அதிகார சபை உடனடியாக இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை பெற்றுத்தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். இதற்காக பாவிக்கப்பட்ட கனரக வாகனங்களும் இதுவரை அகற்றப்படாமல் அவ்விடத்திலையே தரித்து நிறுத்தப்பட்டுள்ளதால் பல்வேறு நெருக்கடி நிலைகள் தோன்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# கும்பாபிஷேகத்தை சிறப்பிக்கும் வகையில் கிழக்கு மாகாண சபை வளாகத்தில் அமைந்துள்ள மகா விநாயகரை வழிபடும் நிகழ்வு




(பைஷல் இஸ்மாயில் )

கும்பாபிஷேகத்தை சிறப்பிக்கும் வகையில் கிழக்கு மாகாண சபை வளாகத்தில் அமைந்துள்ள மகா விநாயகரை வழிபடும் நிகழ்வு நேற்று 24 கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

இந்த கும்பாபிஷேக வழிபாட்டு நிகழ்வுகளை பிரதம குருக்கள் சிவஸ்ரீ அருன் மற்றும் ஆலைய குருக்கள் சிவஸ்ரீ டில்காந்தன் சர்மா ஆகியோரினால் நடாத்தி வைக்கப்பட்டது.

இந்த வழிபாட்டு நிகழ்வில் சுதேச மருத்துவத் திணைக்கள வைத்தியர்களான எஸ்.சிவச்செல்வன், எஸ்.சதீஸ், கணக்காளர் என்.பாலநந்தன், நிருவாக உத்தியோகத்தர் எஸ்.நவந்திரராஜா, திணைக்கள உத்தியோகத்தர்கள், சுகாதார அமைச்சு மற்றும் முதலமைச்சின் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டதுடன் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

# உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டதை எதிர்க்கிறோம்!

## ஊடகச்சந்திப்பில் அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தலைவர்

(காரைதீவு நிருபர் )

நாட்டிலுள்ள உள்ளூராட்சிமன்றங்களின் பதவிக்காலத்தை ஒருவருடகாலம் நீடித்தமையை நாம் எதிர்க்கிறோம்.மக்களுடைய வரிப்பணத்தை வீணாக உள்ளூராட்சி மன்ற தலைவர்கள் உறுப்பினர்களுக்கு சம்பளமாக செலவழிப்பதை நாம் ஏற்கவில்லை.உடனடியாக அதனை ரத்துச்செய்து விசேட ஆணையாளரின்கீழ் நிருவாகத்தைக் கொண்டுவர வேண்டும்.

இவ்வாறு கல்முனையில் நேற்று இடம்பெற்ற ஊடகச்சந்திப்பில் அகில இலங்கை




அரசாங்க பொதுஊழியர்சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

கடந்த 30வருடகாலமாக எந்தவொரு எதிர்பார்ப்புமில்லாமல் நாம் மத்திய மாகாண அரசுகளுடன்பேசி மக்கள் சேவையாற்றி வருகிறோம். மலையகத்தில் தொழிற்சங்கத் தலைவர்களுக்கு எவ்வாறு அரசியல்அங்கீகாரம் கொடுக்கப்பட்டுள்ளதோ, அவ்வாறு வடக்கு கிழக்கில் எங்களை அங்கீகரிக்கவேண்டும்.

வடக்கு கிழக்கில் தொழிலாளர்களுக்கு பாரிய வெற்றிடம் நிலவுகிறது. வடக்கில் 6322 பேருக்கும் ,கிழக்கில் 1000க்கும் மேற்பட்டவர்களுக்கும் வெற்றிடம் நிலவுகிறது.அதனை நிரப்பவேண்டும்.

வடக்குகிழக்கிலுள்ள உள்ளூராட்சிமன்றங்களில் ஆளணிப் பற்றாக்குறை நிலவுகிறது. அங்கு கடந்த 5வருடத்திற்கு மேலாக நிரந்தரநியமனமில்லாமல் குறைந்தவேதனத்துடன் பலர் பணியாற்றிவருகிறார்கள்.அவர்களை நிரந்தரமாக்கவேண்டும். மேலும் மத்தியஅரசில் 13ஆயிரம் பேரும், மாகாணங்களில் 9ஆயிரம் பேரும் கீழுழைப்பு பட்டதாரிகளாக குறைந்தவேதனத்தில் கடமையாற்றிவருகின்றனர். அவர்களது வேதன அளவை எம் என்4 இலிருந்து எம் என்.5க்கு மாற்றி நிரந்தரமாக்க வேண்டும். என்றார்.

சங்கத்தின் இணைத்தலைவர் ஆ.புண்ணியமூர்த்தி மற்றும் உயர்தொழினுட்ப கணக்கியல் பட்டாரிகள் சங்கபொதுச்செயலாளர் ஹுசைன்முபாறக் ஆகியோரும் கருத்துரைத்தனர்.

# மாபெரும் கவிதை மற்றும் சிறுகதைப் போட்டி!

SLBC
MUSLIM SERVICE

2022 மார்ச் மாதம் 8 ஆம் திகதி, சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவை நாடளாவிய ரீதியில் கவிதை மற்றும் சிறுகதைப் போட்டியை நடாத்த திட்டமிட்டுள்ளது.

அந்த வகையில்,

★15 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் இந்த போட்டிகளில் பங்கேற்க முடியும்.

★தங்களது சொந்த படைப்பாகவும் முன்னர் வேறு எதிலும் வெளிவராததாகவும் இருக்க வேண்டும்.

★'பெண்களை மையக் கருவாகக்' கொண்டு கவிதை மற்றும் சிறுகதை எழுதப்பட வேண்டும்.

★சிறுகதை 1000 சொற்களுக்குள் அமைய வேண்டும். (A4 பத்து பக்கங்களுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.)

★கவிதை 40 அடிகளுக்குள் அமையலாம். (A4 மூன்று பக்கங்களுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.)

★தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் கவிதை மற்றும் சிறுகதைகளை எழுத முடியும்.

★தொலைபேசி இலக்கம் அடங்கலாக போட்டியாளரின் விபரங்களை தனித்தாளில் எழுதி அனுப்புவது வரவேற்கத்தக்கது.

★ஒருவர் ஒரு போட்டியில் மாத்திரமே பங்குபற்றலாம்.

போட்டி இறுதித் திகதி : 2022.02.15
நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
அனுப்ப வேண்டிய முகவரி

'மகளிர் தின கவிதைப் போட்டி' அல்லது 'மகளிர் தின சிறுகதைப் போட்டி' என கடித உரையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு,

**போட்டி ஒருங்கிணைப்பாளர்,**
**முஸ்லிம் சேவை,**
**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்,**
**த.பெ.இலக்கம் 574,**
**கொழும்பு 7.**

அல்லது,
slbcmuslimservice@gmailcom
என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.

# முகக்கவசமும் வக்சீனும் கோரோனாவிலிருந்து பாதுகாக்கும்!

## தங்கத்தாரகை விருதுபெற்ற வைத்தியர் தர்ஷிகா கூறுகிறார்

(காரைதீவு நிருபர்
வி.ரி.சகாதேவராஜா)

துரதிஸ்டவசமாக மீண்டும் கொவிட் நம்மத்தியில் தலைதூக்கியிருக்கிறது. தயவுசெய்து முகக்கவசம் அணியுங்கள் .மேலும் மூன்று தடுப்பூசிகளையும் போடுங்கள். இவை மட்டுமே கொரோனாவிலிருந்து நம்மைப் பாதுகாக்கும்.

இவ்வாறு 'தங்கத்தாரகை' விருது பெற்ற சாதனை மாணவி வைத்தியர் தர்ஷிகா தணிகாசலம் கூறினார்.

காரைதீவு பிரதேசசபையின் வருடாந்த தித்திக்கும் தைப்பொங்கல்ப் பெருவிழா தவிசாளர் கி.ஜெயசிறில் தலைமையில் பிரதேசசபையில் சிறப்பாக நடைபெற்றவேளையில் சிறப்புப் பாராட்டுப்பெற்ற வைத்தியர் தர்ஷிகா உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதமஅதிதியாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பணிமனையின் தலைமை பொறியியலாளர் ஏ.எஸ்.கௌரிபாலன், கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.எல்.எ.கமல் நெத்மினி, அம்பாறை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பணிமனையின் சனசமுக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ரவீந்திரமூர்த்தி ஆகியோர் கலந்துசிறப்பித்தனர்.

சாதனை அதிதியாக கலந்துகொண்ட கொழும்புமருத்துவபீடத்தில் அதிகூடிய 13தங்கப்பதக்கங்களைப்பெற்று முதல்தரமாணவியாக தெரிவுசெய்யப்பட்ட அக்கரைப்பற்றைச்சேர்ந்த சாதனை மாணவியும் மட்டக்களப்பு



போதனா வைத்தியசாலையின் வைத்தியஅதிகாரியுமான டாக்டர்தர்ஷிகா தணிகாசலம் பொன்னாடை போர்த்தப்பட்டு 'தங்கத்தாரகை', 'சாதனைச்செல்வி', 'தங்கமகள்' போன்ற பல விருதுகள் மற்றும் நினைவுச்சின்னங்கள் வழங்கப்பட்டு பாராட்டப்பட்டார். காரைதீவு மண்சார்பாக பிரதேசசபையால் மாத்திரமன்றி கனடா ஜேர்மனி போன்ற சர்வதேசநாடுகளின் தமிழ்அன்பர்களாலும் இக்கௌரவம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

டாக்டர் தர்ஷிகாவின் தந்தையார் ஓய்வுநிலை அதிபர் பி.தணிகாசலம் கலந்துகொண்டு சிறப்பித்தார்.பொங்கல் சிறப்புரையை பிரதேசசபையின் ஆலோசனைகுழு உறுப்பினரும் உதவிக்கல்விப் பணிப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா நிகழ்த்தினார். விழாவில் காரைதீவு பிரதேசசபை உறுப்பினர்களான ச.சசிக்குமார் ,திருமதி எஸ்.ஜெயராணி ,எம்.எச்.எம்.இஸ்மாயில் ,எச்எம்.எம்.றனீஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அங்கு வைத்தியர் தர்ஷிகா மேலும் உரையாற்றுகையில்:

சமுகமாற்றத்திற்கான கருவி கல்வியே. கல்வியொன்றால் மாத்திரமே மாற்றத்தை அடையமுடியும். எத்தகைய பின்தங்கிய நிலையிலிருந்து வளர்ச்சிபெற கல்வியால் மாத்திரமே முடியும். இங்கு காரைதீவில் கல்வியைப் பற்றி பேசவேண்டியதேவையில்லை. என்னை இத்துணை விருது வழங்கி பாராட்டியமைக்கு நன்றிகள் என்றார்.

பிரதமஅதிதியான கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பணிமனையின்தலைமை பொறியியலாளர் ஏ.எஸ். கௌரிபாலன் உரையாற்றுகையில்: கலாசாரமில்லாத மக்கள்கூட்டத்தை ஒரு இனமாக அடையாளம் காட்டமுடியாது.எமது இனத்தின் தனித்துவத்தைப்பேணும் முனைப்பு எமதினத்தில் பலருக்கு இல்லை. ஆனால் தவிசாளர் ஜெயசிறிலுக்கு அது நிறையவே உண்டு.

இந்தியாவில் தனியே சூரியஒளியை மாத்திரமே பெற்றுக்கொண்டு உணவருந்தாமல் உயிர்வாழும் சமுகம் இன்னுமுண்டு.சென்னையில் இன்னுமுள்ளனர். இங்கு மூவினமும் இணைந்து பொங்கல்விழாவை கொண்டாடியது பாராட்டுக்குரியது.

தங்கமகள் தர்ஷிகா வெற்றி பெற்றதற்கு 4 குணங்களைப்பார்க்கிறேன். அவரிடமுள்ள நுண்ணறிவு மனப்பாங்கு விழுமியம் பெற்றோர் ஆகிய நான்கும் அவரை உச்சத்தில் வைத்துள்ளது. இவரை மாற்றத்திற்கான முகவராக முன்னுதாரணமாக கொள்ளமுடியும். எமது வசதிகளுடன் விண்ணைத்தொடமுடியும்.

மனிதனும் தெய்வமாகலாம். அதற்கு முனிவர்கள் பலவழிகளைக்காட்டுகிறார்கள். 'பலநூல்படித்து நீ அறியும் கல்வி புதுநலன்நினைத்து நீவணங்கும் செல்வம் பிறர் உயர்வினிலே உனக்கிருக்கும் எண்ணம் இவை அனைத்திலுமே இருப்பதுதான் தெய்வம்' என்று ஒருபாடலுண்டு. எமது தங்கப்பெண் எதிர்காலத்தில் ஒரு தெய்வப்பெண்ணாக வாழவேண்டும் என வாழ்த்திவிடைபெறுகிறேன்.

கௌரவ அதிதியான அம்பாறை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.எல்.எ.கமல் நெத்மினி பேசுகையில்:

அருமையானதொரு சிறப்பானவிழா. தவிசாளர் ஜெயசிறிலுக்கு பாராட்டு.தங்கமகள்தர்ஷிகாவைப் பாராட்டிய பிரதேசசபை தவிசாளர் மற்றும் நிருவாகத்திற்கு பாராட்டுக்கள்.இதுவொரு முன்மாதிரியான சமுகத்தின்தேவை. இச்சாதனை சாதாரணமானதல்ல.தங்கமகளை மாவட்டமட்டத்தில் பாராட்ட நான் திட்டமிட்டுள்ளேன்.என்றார்.

மூத்த உறுப்பினர் எம்.எச்.எம்.இஸ்மாயிலின் நன்றியுரை மற்றும் ஒருநிமிட இணைவணக்கத்துடன் விழா இனிதே நிறைவுற்றது.

# தேசிய ஐக்கிய முன்னணியின் தேசிய அமைப்பாளராக ஷிராஸ் ஜுனூஸ் நியமனம்



(நூருல் ஹுதா உமர்)

முன்னாள் மேல் மாகாண ஆளுநர்அசாத் சாலி தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணியின் தேசிய அமைப்பாளராக கொழும்பை சேர்ந்த பிரபல சமூக செயற்பாட்டாளர் ஷிராஸ் ஜுனூஸ் நேற்று (24) நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி இந்த நியமனத்திற்கான உத்தியோகபூர்வ கடிதத்தை கட்சியின் அலுவலகத்தில் வைத்து தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கும் பிரபல சமூக செயற்பாட்டாளர் ஷிராஸ் ஜுனூசிடம் இன்று கையளித்தார். கடந்த காலங்களில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் வளர்ச்சிக்காக பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருந்த ஷிராஸ் ஜுனூஸ் கடந்த கொழும்பு மாநகர சபை தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் தேர்தலில் வேட்பாளராக களமிறங்கியிருந்ததுடன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஸவின் தேசிய இணைப்பாளராகவும் கடந்த காலங்களில் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# டாக்டர் றிஸான் ஜெமீலின் முன்னோடியான செயற்பாடுகள் அனைத்துமே பாராட்டத்தக்கது

## வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அஸாத் எம். ஹனிபா

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

டாக்டர்றிஸான் ஜெமீலின் முன்னோடியான செயற்பாடுகள் அனைத்துமே பாராட்டத்தக்கது என சம்மாந்துறை மற்றும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைகளின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியக் கலாநிதி டாக்டர் அஸாத் எம். ஹனிபா தெரிவித்தார்.

டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் பிரிவொன்றை நேற்று முன்தினம் (23) ஞாயிற்றுக்கிழமை சம்மாந்துறையில் ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மாபெரும் இரத்ததான முகாமும் இலவச மருத்துவ சேவை மற்றும் கண் பரிசோதனையும் இவ்வைத்தியசாலையில் இடம்பெற்றது.

டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் றிஸான்ஜெமீலின்பணிப்புரைக்கமைய ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில், பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வைத்திய அத்தியட்சகர் மேலும் பேசுகையில், சம்மாந்துறைப்பிரதேசம் மிகக்கூடிய அதாவது சுமார் %5,000 மக்கள் வாழும் பிரதேசம். இந்தப் பிரதேச மக்களின் நலன்கருதி மருத்துவ சேவையை வியாபித்திருக்கின்ற டாக்டர் றிஸான் ஜெமில் மற்றும் நிர்வாகத்தினருக்கு நான் நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதோடு, மேலும் குறிப்பாக, இன்று நாட்டிலே ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றுக்கு மத்தியிலும் இரத்ததான முகாமை நடாத்திக் கொண்டிருக்கின்றார்கள். அதேபோன்று, இலவச கண் பரிசோதனை மற்றும் இலவச மருத்துவ சேவைகளையும் இன்று வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இச் சேவை அளப்பரியது.

இன்று விஷேட வைத்திய நிபுணர்களின் தேவை அதிகமாக இருக்கின்றது. அதனை உங்கள் காலடியில் கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என்ற சேவை மனப்பாங்கில்தான் இந்த சேவையை இவர்கள் ஆரம்பித்து இருக்கின்றார்கள்.

மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு



இதனை ஆரம்பித்து இருக்கின்ற டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்திய சாலையின் நிர்வாகக் குழுவுக்கும் நான் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முக்கியமாக நடமாடும் சுகாதார சேவையை இவர்கள் முன்னோடியாகவும் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாகவும் நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள். உங்களது வீடுகளுக்கு வந்து வைத்திய சேவையை வழங்குவதற்கும் மருத்துவ மற்றும் நிர்வாக குழுவினர் சம்மாந்துறை மண்ணிலே எப்போதும் தயாராக இருக்கின்றார்கள்.

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.எல்.எம். கபீர், லண்டனில் இருந்து வருகை தந்த விசேட வைத்திய நிபுணர் டாக்டர் எல்.எம். மஸுர், டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வைத்தியப் பணிப்பாளர் டாக்டர் சனா , முஸ்லிம் சமய கலாசார அமைச்சினுடைய முன்னாள் செயலாளரும் சம்மாந்துறை பிரதேச செயலாளருமான எம்.ஐ. அமீர், மட்டக்களப்பு அரச ஹோமியோபதி வைத்திய சாலையின் வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.எம். முனீர், அதன் நிர்வாக உத்தியோகத்தர்களான சிராஸ், நஜீம், சுபியான், ரியாஸ் மற்றும் இரத்த வங்கி வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள், சுகாதார ஊழியர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

முழு நாள் நிகழ்வாக இடம்பெற்ற இந்த இரத்ததான முகாமில் பெரும்பாலானோர் ஆர்வத்தோடு கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

# படுகோலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்சுகிர்தராஜனின் 16 வது ஆண்டு நினைவு




மட்டக்களப்பு காந்தி பூங்காவில் கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில்...















மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு ஊடக அமையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் மட்டு ஊடக அமையத்தில்...














திருகோணமலை மாவட்ட ஊடக இல்லத்தில்...


Aaran Ayurveda
wellness massage
www.aaranayurveda.ch
Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich
Poststrasse-5, 3400 Burgdorf
Tel: 0041 43 243 60 66 | 0041 79 940 15 10
ஆயுள்வேத மூலிகை வைத்தியம் மூலம் (கேரளா)
சிகிச்சை அளிக்கப்படும். பழைய நோவாக இருந்தாலும்
நாங்கள் பூரண குணமடைய வைக்கின்றோம்.
சுவிஸ் நாட்டில் உள்ளவர்கள் மருத்துவ காப்புறுதி மூலம்
பணத்தைச் செலுத்தலாம். (Karankenkasse Anerkannt)
மேலதிகத் தொடர்புக்கு
Tel: 0041 43 243 60 66 | Whatsapp: 0041 79 940 15 10 (24 x 7)
www.aaranayurveda.ch


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


Seela
Food
Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.


Allegrotto
Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

கோலாகல

# திறப்புவிழா

# அழைப்பிதழ்

*அன்புடையீர்!*

நிகழும் மங்களகரமான ஸ்ரீ பிலவ வருடம் தைத்திங்கள்
25.01.2022 செவ்வாய்க்கிழமை மதியம் 14.00 மணி முதல் 19.00 மணி வரை
OFTRINGEN மாநகரில்

Asiatischer Lebensmittelladen

## IMPORTAS

கோலாகலமாக ஆரம்பம்பிக்கின்றது.
அன்றையதினம் தாங்களும் தங்கள் சுற்றம் சூழ வருகை தந்து
திறப்பு விழாவை சிறப்பித்து வாழ்த்தும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் நல்வரவை இனிதே, அன்புடன் விரும்பும்...

## IMPORTAS OFTRINGEN

Parkweg 2
4665 Oftringen

www.importasoftringen.ch
062 798 11 11



# ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை ஏமாற்றம் தவிர எம்மாற்றமும் இல்லை

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கொள்கை விளக்கவுரையினை ஜனாதிபதி 18101 ந 2022 அன்று நிகழ்த்தினார்.இக்கால சூழ்நிலையில் அவரது உரை எவ்வாறு அமையும் எனப்பல எதிர்பார்ப்புகள் மக்கள் மத்தியில் இருந்தது. குறிப்பாகத் தமிழர்கள் மத்தியில் இனப்பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதியின் மனதில் மாற்றம் ஏற்பட்டிருக்கும்,தமிழ் தேசியக்கூட்டப்பினரைப் பேச்சுக்கு அழைப்பார் என்றெல்லாம் ஊடகங்கள் ஊகங்களைப் பிரசுரித்தன.ஆனால் ஜனாதிபதியின் உள்ளத்தில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.அவரது உள்ளம் ஓரினம் சார்பாகவே இருக்கின்றது என்பது அவரது பேச்சில் வெளியாகியது.சிங்கள பௌத்தர்களின் தலைவர் என்ற சிந்தனைத் தளத்தில் இருந்து அவர் மாறமாட்டார்.தான் பல்லின மக்களின் தலைவர் என்பதை அவர் புரிய மாட்டார் என்பது புலனாகியது. விடுதலைப் புலிகளின் தலைவர் குறிப்பிட்ட கருத்தொன்று நிரூபணமாகியது.அதாவது சிங்களத் தலைவர்கள் தமிழர்களின் பிரச்சினைகளைப் புரிந்து கொள்வார்கள் அதனைத் தீர்ப்பார்கள் என்று தமிழர்கள் நினைப்பது முட்டாள்த்தனமான சிந்தனையாகவே இருக்கும் என்று எதிர்வு கூறியிருந்தார்.அந்த வரலாற்றுப் பட்டறிவினை ஜனாதிபதி மீண்டும் ஒரு தடவை மெய்ப்பித்திருந்தார்.74 ஆவது சுதந்திர தினத்தை நோக்கிச் சிங்களத் தலைவர்கள் நகர்ந்தாலும் இனப்பிரச்சினை விடயத்தில் அக்கறையற்றவர்களாகவே இருக்கின்றார்கள் என்பது புலானாகிறது. மேலும் உள்நாட்டுப் பொறிமுறையால் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் ஆளுமை,சக்தி இலங்கைத் தலைவர்களிடம் இல்லை என்பதை உணர முடிகிறது.

இந்த நிலையில் தமிழ்த் தலைவர்கள் உறுதியான முடிவுக்கு வர வேண்டும். எமது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரே வழிமுறை சர்வதேச அணுகுமுறைதான் என்பதை உணர்ந்து அதற்கு ஏற்ப தமது அணுகு முறைகளை வேகமாகவும், விவேகமாகவும் நகர்த்த வேண்டும். ஜனாதிபதி அழைப்பார்,பேசுவார், தீர்ப்பார் என்றெல்லாம் நினைப்பது ஏமாற்று வேலையாகவே அமையும்.எனவே உள்நாட்டில் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சிங்கள ஆட்சியாளர்களால் முடியாது என்பது மட்டும் தெளிவான உண்மையாகும்.அப்படி இந்த சிங்களத் தலைமைகள் அழைத்தாலும் தமிழ் மக்களை மட்டுமல்ல சர்வதேசத்தையும் ஏமாற்றும் செயலாகவே அமையும். தமிழர்களின் பிரச்சினை என்பது அபிவிருத்தி மாத்திரந்தான்.அதனைத் தீர்த்து விட்டால் தமிழர்கள் சரணாகதியாகி விடுவார்கள் என்று ஜனாதிபதியும்,அவரது அரசாங்கத்தினரும் நினைக்கிறார்கள். இப்படியான கருத்தினை முன்பொரு தடவை முக்கியமான அமைச்சர் ஒருவர் அப்போது எதிர்க்கட்சியிலுள்ள போது உரையாடும் வேளையில் என்னிடம் கூறியிருந்தார். அதற்குச் சாதகமாக அதாவது ஜனாதிபதியின் உரைக்குச் சாதகமாக பிழைப்புவாத உழைப்புவாத அரசியல்வாதிகள் சிலர் அடிப்படைவாதிகளோடு இணைந்து மல்லியை மலையாகக் காண்பிப்பது போன்று பிரசாரம் செய்கிறார்கள். இதற்கு உதாரணமாக கொள்கை விளக்கவுரைக்குச் சாதகமாகத் துதிபாடுகிறார்கள்.பாவம் அவர்களது பதவியைத் தக்கவைத்துக் கொள்வதற்காக மக்களைப் பகடைக்காய்களாக உருட்டி விளையாடுகிறார்கள்.அமைச்சர் டக்ளஸ் அவர்களின் கருத்துப்படி சாதகமானதைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறிகின்றார். அடிப்படைவாதிகள் தரமறுக்கின்ற உரிமைகளைச்சாத்தியமற்றவை என்று கருதி விட்டுவிட வேண்டும் என்பதே அவரது நிலைப்பாடாகும். மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற இவரது கருத்தினை பேரினவாதிகள் ஏற்கமாட்டார்கள் என்பதால் சாத்தியமற்றது என்று வீசி விட்டார் இவர். இப்படியாகப் பேரின அடிப்படை வாதிகளோடு ஒட்டி உறவாடி அவர்களை தமது அமைச்சர் பதவித்தேவைக்காக நியாயப்படுத்துவது மக்களை மறந்த சுயலாப நிலைப்பாடாகும். இதனை மக்கள் புரிய வேண்டும்.

வடக்கு கிழக்கிலுள்ள தமிழ்க் கட்சிகள் தமது நிலைப்பாட்டைத் தற்காலிகமாக வேனும் மாற்றித் தன்னோடு ஒத்துழைக்குமாறு ஜனாதிபதி கேட்டிருக்கின்றார். கணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினை பொதுவானது என்றார்.அப்படியென்றால் இனப்பிரச்சினைத்தீர்வு விடயம், காணமால் ஆக்கப்பட்டவர்களின் நீதிவிடயம், காணி அபகரிப்பு விடயம், வடக்கு கழக்கில் திட்டமிட்ட பேரின வாதக்குடியேற்றம், அரசியல் கைதிகள் விடயம், அரசுக்கு எதிரான ஜனநாயக செயற்பாடுகள்,மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் இவற்றையெல்லாம் கைவிட்டு தமிழ்த் தேசியக் கட்சிகள் கைகட்டி வாய்பொத்தி நிற்கவேண்டும் என்று ஜனாதிபதி எதிர்பார்க்கின்றாரா? என்பதுதான் சொரணையுள்ள தமிழர்களின் கேள்வியாகும். கற்றுக் குட்டிகள்,கட்டுப்பட்ட பொம்மையர்கள் வெறும் பதவிகளுக்காக உழைப்புக்காக கை கட்டி வாய்பொத்தி நின்று துதி பாடலாம்.ஆனால்,உண்மையான தமிழ்ப் பிரதிநிதிகள் இவற்றைச் செய்ய முடியாது. ஒட்சிசன் இன்றியும் வாழ்வார்கள் பதவியில்லாமல் வாழார்கள் என்கின்றவர்களுக்கு ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை தித்திக்கலாம். ஆனால் தமிழர்களுக்கு ஏமாற்றத்தைத்தவிர எம்மாற்றத்தினையும் இந்தக் கொள்கை விளக்கவுரை அளிக்கவில்லை.இதனைத்தான் உப்புச்சப்பற்ற உதவாத குப்பை உரையென்று தமிழ் தேசியக்கூட்டமைப்பின்தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் ஐயா குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி நாட்டை முழுமையாகக் கடன் பொறிக்குள் சிக்க வைத்து நாட்டின் சொத்துக்களையும் இறைமையையும் இழந்தாலும் தமிழர்களின் உரிமையைத் தானாக வழங்க மாட்டார் என்பது மட்டும் உண்மையாகும். எனவே ஜனாதிபதியின் அழைப்பைத் தமிழத் தலைவர்கள் எதிர்பார்க்காமல் சர்வதேச அணுகுமுறைகளைக் கையாள்வதொன்றே சரியான நிலைப்பாடாகும்.இந்நிலையில் தமிழ்க் கட்சிகள் தமக்குள் காணப்படும் தன்முனைப்புச் சிந்தைகளைத் தள்ளி வைத்துவிட்டு தமிழ் மக்களுக்காக ஒற்றுமையாகி உழைக்க வேண்டும் என்பதே தமிழர்களின் ஏகோபித்த விருப்பமாகும்.எவரும் தன்முனைப்பான முரண்பாடான கருத்துக்களைக் கொட்டி தமிழர் ஐக்கியத்தினைச் சிதைக்காமல் இருக்க வேண்டியது அவசியமாகும்.அண்ணன் எப்போது சாவார் திண்ணை எப்போது காலியாகும் என்ற சுயநல அரசியலையும் தமிழ்த் தலைவர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.சிங்கள பௌத்த சிந்தனைத் தளத்தால் உருவாக்கப்பட்ட இராணுவ மயப்பட்ட சிந்தனையில் ஊறியுள்ள பிடிவாதப்போக்குடைய நாட்டின் தலைவரிடம் இருந்து தமிழர்கள் எதனையும் எதிர்பார்க்க முடியாது என்பதே உண்மையாகும். விவசாயிகளின் சாதாரண உரப்பிரச்சினையையே விளங்கிக் கொள்ள முடியாத தலைவர்கள் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்.அப்படி எதிர்பார்த்தால் அது தமிழர்களின் தவறாகவே இருக்க முடியும்.





ஜி.ஸ்ரீநேசன்,
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், மட்டக்களப்பு

Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57

Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
Tel : 044 2410241
Fax : 044 2410245
sikaramgmbh@gmail.com / www.sikaram.com

# ஒற்றையாட்சிக்கு உட்பட்ட எந்தவொரு தீர்வும் தமிழர்களுக்கு விடிவைத் தராது

(த.சுபேசன்)

ஒற்றையாட்சி முறைமைக்கு உட்பட்ட எந்தவொரு தீர்வுமே தமிழர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்தித் தராது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

20/01/2022 வியாழக்கிழமை பிற்பகல் சாவகச்சேரி பிரதேசத்திற்கு வருகை தந்து உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

கடந்த 18ஆம் தேதி இடம்பெற்ற ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது அமர்வை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் ஜனாதிபதியின் சிம்மாசன உரை இடம்பெற்றிருந்தது.அந்த உரையில் ஜனாதிபதி கூறியிருந்தார் நான் இந்த நாட்டில் எனக்கு வாக்களித்த, வாக்களிக்காத அனைவருக்குமே பொறுப்பு கூற வேண்டியவன் என்று.இந்த நாடு சுதந்திரத்திற்கு முன்னர் வரைக்கும் சிங்கள,தமிழ் என இரண்டு பெரும் இராட்சியங்களாக இருந்து பின்னர் பிரித்தானியர்களால் தான் ஒன்றாக்கப்பட்டிருந்தது. 1948இல் சுதந்திரம் கொடுக்கும் போது ஒரே நிர்வாக அலகின் கீழ் பெரும்பான்மை இனத்தவர்களிடம் அந்த சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தது.அன்று முதல் இன்று வரை 74வருடங்களாக வடக்குகிழக்கு தமிழர்கள் இலங்கையின் அரசியலமைப்பினை ஏற்றுக்கொள்ளவில்லை.முற்றாக நிராகரித்து தங்களுடைய தாயகம்,தேசம்,இறைமை,சுயநிர்ணய உரிமை ஆகியன அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையிலான ஒரு சமஷ்டி அரசியல் கட்டமைப்பாக இந்த நாட்டின் அரசியலமைப்பு கொண்டு வரப்பட வேண்டும் என்ற ஒரு கோரிக்கையோடு போராடி வருகின்றனர்.



அதற்காக பெருமளவு இரத்தம் சிந்தப்பட்டுள்ளது. நாட்டில் இரண்டு இனங்களுக்கும் இடையிலான உறவு என்பது இரு துருவங்களாகக் காணப்படுகின்றன.எங்கள் இனத்தின் மீது யுத்தத்தை முன்னெடுத்து தமிழர்களுக்கு பெரும் அழிவை ஏற்படுத்தியதில் இப்போதைய ஜனாதிபதி கோட்டபய ராஜபக்சவிற்கு பெரும் பங்கு இருக்கின்றது. அவர் பாதுகாப்புச் செயலாளராக இருந்த போது காணாமல் ஆக்கப்பட்ட, அவருடைய தலைமையின் கீழான படைகளிடம் கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கானவர்களுக்காக இன்றும் நீதி கோரி போராடிக்கொண்டிருக்கின்றனர். அவ்வாறு இருக்கும் நிலையில் அவர் சரியான பொறுப்புள்ள ஜனாதிபதியாக இந்த சிம்மாசன உரையினை ஆற்றியிருக்கவில்லை.தமிழர் விவகாரத்தை முற்றாக மறந்து வெறுமனே இந்த நாடு ஒரு பெரும்பான்மை இனத்திற்கு மட்டும் சொந்தம் என்ற அடிப்படையில் தான் அவரது செயற்பாடுகள் இருக்கின்றன.

ஜனாதபதி தனது உரையில் இன்னொரு விடயம் கூறியிருந்தார்.அதாவது இந்த நாட்டின் அதியுயர் சபைக்கு வேறுபட்ட அரசியல் நிலைப்பாடுகளோடு அந்த மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிப்பவர்களாக வந்திருப்பவர்கள் கூடியிருக்கும் சபை இது.எனவே அவர்களது கருத்துக்களுக்கும் மதிப்பளிக்கிறேன் என்று குறிப்பிட்டவர் மற்றொரு இடத்தில் வடக்குகிழக்கு பிரதிநிதிகள் தங்களது நிலைப்பாட்டினை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு அபிவிருத்திக்காக தனக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று கூறினார்.

74வருடங்களாக இந்த நாடு படிப்படையாக அழிந்து இன்று ஒரு வங்குரோத்து நிலையை அடைந்துவிட்டது.நாட்டின் அடுத்த நிலைமை என்னவென நகர்த்த முடியாத அளவிற்கு பதாளத்திற்குள் சென்றிருக்க காரணமே இந்த அரசியல் பிரச்சனை தீர்க்கப்படாமை தான்.இந்தப் பிரச்சனையை தீர்ப்பதற்கான எந்தத் திட்டமும் இன்றி வெறுமனே அபிவிருத்தி என்பது பட்டினியில் உள்ள மக்களை ஏமாற்றும் செயற்பாடு.நாட்டினை முன்னேற்ற சொல்லப்படும் கருத்துக் கிடையாது. தமிழர்களது அரசியல் பிரச்சனையை தமிழர்கள் எதிர்பார்க்கும் முகமாக தமிழர் தேசத்தை அங்கீகரித்து சிங்கள தேசமும்தமிழ் தேசமும் சமமானது என்ற நிலையை ஏற்படுத்தாமல் ஒரு போதும் இவர்களால் இந்தப் பிரச்சனையைத் தீர்க்க முடியாது.இந்தியாவின் எடுபிடிகளாக இருந்து வருகின்ற சம்பந்தன்,மாவை,சுரேஷ் பிரேமச்சந்திரன்,செல்வம் அடைக்கலநாதன்,சித்தார்த்தன்,ஸ்ரீகாந்தா போன்றவர்களின் கருத்துக்களின் அடிப்படையில் ஒற்றை ஆட்சிக்குள் 13வது திருத்தச் சட்டத்தை ''நடைமுறையில் இருப்பதனை நடைமுறைப்படுத்த வேண்டும் ''என்ற கோஷம் மூலமாகவும் இந்த நாட்டில் ஒரு முன்னேற்றத்தினை ஏற்படுத்த முடியாது.இன நல்லிணக்கத்தினையும் ஏற்படுத்த முடியாது.ஒற்றையாட்சிக்கு உட்பட்ட எந்தவொரு தீர்வும் தமிழர்களுக்கு எதிர்காலத்தை ஏற்படுத்தித் தராது.13வது திருத்தச் சட்டத்தினை அடியோடு நிராகரிக்கிறோம். தமிழர்கள் 74ஆண்டுகளாக நிராகரித்து வரும் விடயம் இது.

ஜனாதிபதி ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்கப் போகிறார். எனவே ஜனாதிபதி தமிழர்களது தேசம்,இறைமை,சுயநிர்ணய உரிமைகளை அங்கீகரித்த அடிப்படையில் அரசியலமைப்பினை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.இல்லாவிட்டால் இந்த நாட்டினை மீள முடியாத பாதாளத்திற்குள் தள்ளிய பெருமை இந்த ஜனாதிபதியை வந்தடையும்.என்றார்.

# அறுவடைக்கு 4 வாரமிருக்கிறது: மானிய பசளையோ கொடுப்பனவோ கிடைக்கவில்லை!

## பயிர் அழிவதற்கு முன் வழங்குங்கள் ஜனாதிபதியிடம் கோக்கட்டிச்சோலை விவசாயிகள் மனு!

(காரைதீவு நிருபர் )

அறுவடைக்கு இன்னும் ஆக நான்கு வாரங்கள் இருக்கின்றன. ஆனால் எமக்கு வழங்கப்படவேண்டிய மானிய பசளையோ மானிய பசளைக்கான கொடுப்பனவோ இன்னும் வழங்கப்படவில்லை. எமது ஜீவாதாரமான பயிர் அழிந்துநாசமாகும் முன்னர் இவற்றை வழங்குமாறு வேண்டுகின்றோம்.

இவ்வாறு ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவிடம் கொக்கட்டிச்சோலை கமநலப் பிரிவுக்குட்பட்ட கிளாக்கொடிச்சேனை கமநலஅமைப்பு அவசர வேண்டுகோளை விடுத்துள்ளது.

குறித்த அமைப்பின் தலைவர் சிவஞானம் அகிலேஸ்வரன் பொதுச்செயலாளர் வேலாப்போடி கணேசமூர்த்தி ஆகியோர் ஒப்பமிட்டு இம்மகஜரை அனுப்பியுள்ளனர். பிரதிகளை விவசாயஅமைச்சர் கிழக்கு ஆளுநர் தொடக்கம் பாராளுமன்றஉறுப்பினர்கள்வரை அனுப்பப்பட்டுள்ளது.

அதுதொடர்பாக தெரிவிக்கப்படுவதாவது:

எமது கண்டத்தில் சுமார் நூறு விவசாயிகளுக்கு இன்னும் பிரஸ்தாப மானிய பொட்டாசியம் குளோரைட் பசளையோ, பசளை மானியமோ இன்னும் கிடைக்கவில்லை. இதனால் உரிய பசளையின்றி ,பயிர்கள் மஞ்சள்நிறமாகி வீரியம் குறைந்துவருகிறது.அப்படியேவிட்டால் பயிர் அழிந்து போகும்.

உரிய அதிகாரிகளிடம்கேட்டால் 'வந்தால் தருவோம்' என கைவிரிக்கிறார்கள்.





இன்னும் நான்கு வாரங்களில் பயிர்அறுவடை செய்யப்படும் இன்றைய நிலையில் உடனடியாக பசளையையும் மானியத்தையும் வழங்கஆவனசெய்யவேண்டும்.

மட்டு.மாவட்ட ஆணையாளரின் கருத்து:

இதுதொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட கமநலஅபிவிருத்தி உதவி ஆணையாளர் பி.ஜெகநாத்துடன் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் பின்வருமாறு பதிலளித்தார். இந்தப்பிரச்சினை கொக்கட்டிச்சோலைக்கு மாத்திரமல்ல முழு மட்டு.மாவட்டத்திலும் உள்ளது. மாவட்டத்தில் இன்னும் சுமார்3ஆயிரம் பேருக்கு மானியப்பசளைக்கான கொடுப்பனவு வழங்கப்படவேண்டும்.விரைவில் அது வரும். வந்ததும் குறித்த விவசாயிகளுக்கு உடனடியாக வழங்குவோம்.

இதேவேளை பொட்டாசியம் குளோரைட்(Kcl) பசளை நாட்டிற்கு 48ஆயிரம் மெற்றிக்தொன் தேவை. ஆனால் வந்ததோ 30ஆயிரம் மெற்றிக்தொன். ஆக 18ஆயிரம் மெற்றிக்தொன் தேவையாகிறது. எனவே இப்பசளைக்கான தட்டுப்பாடு என்பது மட்டக்களப்பிற்கு மட்டுமல்ல முழு நாட்டிற்குமுரியது. எம்.ஓபி(MOP) பசளைக்கும் பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது. எமக்கு பசளை கிடைத்தால் வழங்குவோம். என்றார்.

# இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பினால் ஸ்மார்ட் போர்ட் வகுப்பறை கையளிப்பு







இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் ஊடாக முன்னேடுக்கப்படுகின்ற கல்விக்கு கரங்கொடுப்போம் வீட்டுக்கொரு பட்டதாரியை தோட்டபுறம் எங்கும் உருவாக்குவோம் என்ற தொனிப்பொருளில் இரத்தினபுரி ஹப்புகஸ்தென்னகல் லேல்ல கலைமகள் தமிழ் தேசிய பாடசாலையில் அமைக்கப்பட்ட ஸ்மார்ட் போர்ட் வகுப்பறை ஒன்றை கையளிக்கும் நிகழ்வும் பொங்கல் விழாவும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் தலைவர் ஆர்.ரமேஸ்வரன் ,சிரேஸ்ட ஆலோசகர் கலாநிதி எஸ்.கருணாகரன், செயலாளர் ஆசிரியர் எஸ்.தயாளன் பொருளாளரும் ஊடகவியலாளருமான ஆர்.அஜித்குமார் ஆகியோர்கலந்துக்கொண்டனர்.

# மலையகத்தில் இ.கி.மிசன் சுவாமிகளின் சூறாவளி சுற்றுப்பிரசாரம்!





(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை இராமகிருஸ்மிசன் சுவாமிகளின் சூறாவளிச்சுற்றுப்பயணமும் ,வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின் இலங்கைவிஜயத்தின் 125ஆவது ஆண்டுநிறைவு விழிப்புணர்வுப்பிரசாரமும் மலையகத்தில் ஐந்துதினங்களாக நடைபெற்றன.

சுவாமிகள் கண்டி ,ஹற்றன் ,கொட்டகல, பன்வில, உன்னஸ்கிரிய ஆகிய பிரதேசங்களுக்குச்சென்று ஆன்மிகச்சொற்பொழிவு நிகழ்த்தினர்.

உலகளாவிய ராமகிருஷ்ண மிஷனின் இலங்கைக்கான தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தஜீ மஹராஜ் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் சுவாமி தக்ஷஜானந்தஜீ மஹராஜ் ,மட்டு.இ.கி.மிசன் துணைமேலாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜீ மஹராஜ் ஆகியோர் பிரசன்னமாயிருந்தனர்.

பிரதம அதிதியாக, இந்தியா கோயம்புத்தூர் ராமகிருஷ்ண மிஷன்  'ரீமத் சுவாமி ஹரிவ்ரதானந்தஜீ மஹராஜ் கலந்துகொண்டு கதாப்பிரசங்கம் நிகழ்த்தினார்.

கண்டி இந்துமாமண்டபம் ,ஹற்றன் ஹைலண்டஸ் கல்லூரி, கொட்டகல ஆசிரியர் கல்வியியல்கல்லூரி ,கொட்கல விஸ்ணுஆலயம் ,கொட்டகல செல்வவிநாயகர் மண்டபம், பன்வில மகாவித்தியாலயம் ,உன்னஸ்கிரிய தமிழ்ப்பாடசாலை ஆகிய இடங்களில் மேற்படி சொற்பொழிவுகள் நடைபெற்றன.

மலையகப்பயணத்தை வெற்றிகரமாக பூர்த்திசெய்த சுவாமிகள் நேற்றும் ,நேற்றுமுன்தினமும் வவுனியா, மன்னார் ,நானாட்டான் போன்ற பிரதேசங்களுக்கு சென்று வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின் இலங்கைவிஜயத்தின் 125ஆவது ஆண்டுநிறைவு விழிப்புணர்வுப்பிரசாரத்தை முன்னெடுத்தனர்.

எதிர்வரும் 27ஆம் ,28ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் சுவாமிகளின் விஜயமும் சொற்பொழிவும் இடம்பெறும் என தெரிவிக்கப்படுகிறது.



# பயிற்சியும் முயற்சியுமே எனது வெற்றியின் ரகசியம்!

## தேசிய விருது பெற்ற காரைதீவு சிவஜோதி கூறுகிறார்



உதவிக் கல்விப்பணிப்பாளர்
வி.ரி.சகாதேவராஜா
(காரைதீவு நிருபர்)

கடந்த 1012 வருட கால பயிற்சியும் முயற்சியுமே எனது வெற்றியின் ரகசியம் என்று அகில இலங்கை ரீதியாக தெரிவு செய்யப்பட்ட வளர்ந்து வரும் 50 பெண் தொழில் அதிபர்களில் ஒருவரான காரைதீவு பெண்மணி கோபாலசிங்கம் சிவஜோதி கூறினார்.

இலங்கையில் வளர்ந்துவரும் முதல் 50பெண் தொழில் அதிபர்களில் ஒருவராக அம்பாறை மாவட்டத்திலிருந்து தெரிவான ஒரேயொரு தொழில்முயற்சியாளரான காரைதீவு.12ஐச்சேர்ந்த சிவஜோதி அவர்களைப் பேட்டிகண்டபோது அவர் மேற்கண்டவாறு அடக்கமாகத்தெரிவித்தார்.

வளர்ந்து வரும் 50 பெண்தொழிலதிபர்களை பாராட்டும் விதமாக நிணிட்னுண கூணிணீ50 2021 விருது வழங்கும்விழா கொழும்பு சங்கிரிலா ஹோட்டலில் கடந்த 18ஆம் திகதி நடைபெற்றது.

விழாவில் 'காரைதீவு லக்ஸ்மி புரோடக்ஸ்' உரிமையாளரான கோ. சிவஜோதி அவர்களும் நிணிட்னுண கூணிணீ50 விருதைப் பெற்றுக்கொண்டார்.

அவர் காரைதீவு வீடுவந்துசேர்ந்ததும் அவரை பேட்டி கண்டோம்.

அதன்விபரத்தை இங்கு தருகிறோம்.

**கேள்வி: முதலில் தங்கள் குடும்ப பின்னணியைக்கூறுங்கள்?**

**பதில்:** நாம் எமது தாய்தந்தையுடன் காரைதீவு 9ஆம் பிரிவில் வசித்துவந்தோம். சுனாமி எமது குடும்பத்தை சூறையாடிவிட்டது. எனது அம்மா2தங்கச்சி மச்சாள் எல்லாமாக 45பேர் சுனாமியில் இறந்துள்ளனர். பின்பு இந்தஇடத்தில் கடன்பட்டு காணிவாங்கினோம். வீடுகட்டித்தந்தார்கள். ஜோ.யேசுமணிஎன்பவரை 20வருசத்திற்கு முன்னர் கல்யாணம் செய்தோம். 13வருடங்களுக்கு பிறகு உபாஷனா(8) என்ற பெண்பிள்ளை பிறந்தார். அந்தப்பிள்ளை நல்லா வரவேண்டும் என்பதற்காக இவ்வாறு முயற்சியுடன் செய்கிறேன்.

**கேள்வி: தேசியமட்டம்வரை உயர்ந்த நீங்கள் படிப்பு தொடர்பில் கூறுங்கள்?**

**பதில்:** நான் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியை படித்து இடைநிலைக்கல்வியை விபுலாநந்தாவில் 9ஆம் வகுப்பு வரை மாத்திரமே படித்தேன்.அம்மாவிற்கு சுகமில்லாமல்வரவே நான் படிப்பிற்கு முழுக்குப்போட்டுவிட்டேன்.அவ்வளவுதான்.



**கேள்வி: சரி. இவ்வாறான சுயதொழிலில் ஈடுபடவேண்டும் என்ற ஆர்வம் எவ்வாறு வந்தது?**

**பதில்:** எனது தாயின் பெற்றோர் இப்பலகாரத்தயாரிப்பில் மிகுந்த ஈடுபாட்டைக்காட்டியுள்ளதாக அம்மா சொல்வார். அதுமட்டுமல்ல நாமும் மற்றயவர்களைப்போல் வசதியாக வாழவேண்டுமானால் ஏதாவது தொழில்செய்தாகவேண்டும் என்ற ஆர்வம் வந்தது. அதன் வெளிப்பாடே இது.



**கேள்வி : ஆரம்பத்தில் எவ்வாறு தொழிலை ஆரம்பித்தீர்கள்?**

**பதில்:** ஆரம்பத்தில் சின்ன பகோடா 5ருபா பக்கட் போட்டு கடைகளுக்கு கொடுத்தேன்.அப்போது எமதூரைச்சேர்ந்த ரமணன் எனும் கடைமுதலாளிதான் என்னை ஊக்குவித்தார். அதன்பிறகு பிரதேசசெயலகத்தில் 2011இல் பதிவுசெய்து தொழிலை செய்தோம். பருத்தித்துறை வடை, மரவள்ளிக்கிழங்குச்சீவல் ,பகொடா ,முறுக்கு, பயற்றைஉருண்டை ,லட்டு ,பலகாரம் போன்ற உணவுப்பொருட்களை சுகாதாரமுறைப்படி தயாரித்து வழங்கிவருகிறோம்.

சிறுகைத்தொழிலாக ஆரம்பித்துவந்தோம் ஆரம்பத்தில் 2000ருபா முதல் போட்டு இத்தொழிலை ஆரம்பித்தோம்.2கிலோ மாவில் தொடங்கிய இத்தொழில் படிப்படியாக வளர்ந்து இன்று



2மூடை மாவை பயன்படுத்துகின்ற அளவிற்கு வந்துள்ளது. கிலோ எண்ணெய் இன்று வூளியில் வாங்கிவருகிறோம்.ஆரம்பத்தில் விற்கு அடுப்பில் ஆரம்பித்து தற்போது எரிவாயு அடுப்பைப் பயன்படுத்துகிறோம். இதற்காக பதிவுசெய்து லைசன்ஸ் எடுத்தோம். எமது தயாரிப்புகளை எமது கணவர் கடைகளுக்கு வழங்கி உழைத்து வந்தோம்.

**கேள்வி: உங்கள் சிறுதொழிலில் இன்னும் பலரையும் இணைத்துள்ளீர்களே. அதற்கு வேறு விசேட காரணங்கள் உள்ளனவா?**

**பதில்:** ஆம் காரணம் உள்ளது. இளமையில் எமது குடும்பத்தில் 5பெண்பிள்ளைகள். மிகுந்த கஸ்டப்பட்டோம். சிலவேளைசாப்பிடவும் வழியில்லாமல் இருந்துள்ளோம். இனி அதனை நாம் மட்டுமல்ல யாரும் அனுபவிக்கக்கூடாது என்பதற்காக இத்தொழிலில் பலரையும் இணைத்துள்ளேன். தொழில்வழங்குகிறேன்.

**கேள்வி: இத்தொழிலில் கிடைக்கும் ஊதியம் போதுமானதா?**

**பதில்:**இதில் கிடைக்கும் ஊதியம் போதுமானது. மாசம் ஒன்றுக்கு ஒன்றரைலட்சருபாவிற்கு விற்பனை நடக்கிறது. சந்தோசம்.நாம் கடனில்லாமல் சொந்தக்காலில் நிற்கிறோம்.நிம்மதியாக சந்தோசமாக வாழ்கிறோம்.இதைவிட என்ன தேவை?

**கேள்வி: வெட்டியாய் காலத்தை கழிப்பவர்களுக்கு நீங்கள் சொல்லவிளைவது என்ன?**

**பதில்:** சும்மா வீட்டில் அல்லது பக்கத்துவீட்டிற்குச்சென்று அரட்டைஅடித்து ,வீண்வம்பை விலைக்குவாங்கி காலத்தைகழிக்காமல் இப்படி பயனுள்ள தொழில்முயற்சியில் ஈடுபட்டால் நாம் மகிழ்ச்சியாக நிம்மதியோடு வாழலாம்.

**கேள்வி: பிரபல சங்கிரில்லா ஹோட்டலில் ஏறிஇறங்கியுள்ளீர்கள்.இது எப்படி சாத்தியமாயிற்று?**

**பதில்:** அம்பாறை கச்சேரியூடாக விண்ணப்பித்து இந்த விருது கிடைக்கப்பெற்றுள்ளது. சிறுவர் பெண்கள் மகளிர் அமைச்சுடாக இந்தத்தெரிவு இடம்பெற்றது.இதற்கென அம்பாறைக் கச்சேரியில் இடம்பெற்ற நேர்முகப்பரீட்சையில் தோற்றினேன். மாவட்டத்தின் 20பிரிவுகளிலிருமிருந்தும் 20தொழில்முயற்சியாளர்கள் கலந்துகொண்டபோதும் என்னை அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள். அதற்பின்னர்தான் கொழும்பு விருதுக்கு தெரிவானேன். இதனை நான் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை.

**கேள்வி: கொழும்பில் தேசியவிருதைப் பெற்ற நீங்கள் யாருக்காவது நன்றிகூறவிரும்புகிறீர்களா?**

**பதில்:** இந்த சந்தர்ப்பத்தில் என்னை ஊக்குவித்த அனைவரையும் குறிப்பாக என்னுடன் வேலைசெய்வோர் முதலில் பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியவர்கள். அடுத்து பிரதேசசெயலகத்தினர் ,சமுர்த்தி பிரிவினர், விதாதா சங்கத்தினர் எனது கணவர், குடும்பத்தினர் அனைவரும் நன்றிக்குரியவர்கள்.

**கேள்வி: இந்த 12வருட தொழில்வாழ்வில் ஏதாவது சவால்களை எதிர்கொண்டீர்களா?**

**பதில்:** ஏனில்லை. சவால்கள் பல. எனது லக்ஸ்மி தயாரிப்பை இல்லாதொழிப்போம் என பொறாமையில் சொன்னவர்கள் உள்ளனர். அதற்கான முயற்சியிலும் ஈடுபட்டனர். நான் அதனையிட்டு அலட்டிக்கொள்ளவில்லை. செய்யும் தொழிலை நேர்மையாக, சிறப்பாக ,தரமாக செய்துவந்தேன். இன்று அவர்கள் இருந்தஇடம் தெரியாமல்போயுள்ளனர்.

**கேள்வி: தற்போது தொழில் எவ்வாறு செல்கிறது?**

**பதில்:** நன்றாக இருக்கிறது. மேலும் விஸ்தரிக்கவேண்டும்.தொழில் வளரவளர இன்னும் சிலரை இணைக்கவேண்டிய தேவை எழுந்தது. அவர்களுக்கும் வேலைவழங்களண்ணி நான்கு பேரை இணைத்து பெரும்படியாக தயாரித்துவருகிறோம். சும்மா அரட்டை அடித்து காலத்தை போக்காமல் இவ்வாறு பயனுள்ளவகையில் பொழுதைக்கழித்து எம்மை வளப்படுத்திக் கொள்ளலாம்.

தற்போது வடைசெய்யும் மெஷின், மாப்பினையும் மெஸின், பாக்பண்ணும் இயந்திரம் என்பவற்றை கொள்வனவுசெய்தோம்.கடைகளுக்கு நல்ல ஓர்டர்வருகிறது. வெளிநாட்டிற்குபோவோரும் வந்து வாங்குகிறார்கள். தைப்பொங்கல் சித்திரைவருடமென்றால் நிறைய ஓர்டர்வருகிறது. தயாரித்து முடிய அத்தனையும் விற்பனையாகிவிடுகிறது. தைப்பொங்கலுக்கு அனைத்தும் விற்பனையாகிற்று. இப்போ பண்டங்கள் கைவசமில்லை. நிறைய கிராக்கி இருக்கிறது.உண்மையில் கூறப்போனால் இப்போ நேரம்தான் இல்லை.

**கேள்வி: சமுர்த்தி உதவிசெய்ததாக கூறினீர்கள். எவ்வாறு என விபரிக்கமுடியுமா?**

**பதில்:** ஆம் நிச்சயமாக சமுர்த்தி மனேஜர் உள்ளிட்ட ஊழியர்கள் செய்த உதவிதான் நான் வளரக்காரணம் என்பேன்.சமுர்த்தி நல்ல உதவி செய்கிறது. முதலில் 1லட்சம் ருபா வழங்கினார்கள் பின்னர் இரண்டரை லட்சருபா வழங்கினார்கள். நான் அவற்றை முழுமையாபயன்படுத்தி அவ்வப்போது அதனை மீளச்செலுத்தியும்வந்தேன்.பின்னர் 5லட்சருபா தந்தார்கள். தற்போது 10லட்சருபா கடன்தர முன்வந்துள்ளனர்.



**கேள்வி: உங்கள் எதிர்கால லட்சியம் என்ன?**

**பதில்:** எனது இலட்சியம் இத்தொழிலை பெரியஅளவில் விஸ்தரித்து 4பேருக்கும் தொழில் வழங்கி சகலரையும் பசிபட்டினியின்று வாழவைக்கவேண்டும். நான்பட்ட கஸ்டம் மற்றவர் படக்கூடாது. இதுதான் எனது லட்சியம்.



# திருமலை விசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ விஸ்வநாத சுவாமி சிவன் ஆலயத்தின் மகாகும்பாபிகேம்..!

(அ . அச்சுதன்)

இலங்காபுரியில் விலக்கு சைவமும் தமிழும் திருமுறை பாராயணமும் புராணமும் தழைத்தோங்கும் திருகோணமலையில் தொன்மை மிகு சைவத் திருக்கோயில்களையும் கலை கலாச்சாரபாரம்பரியங்களை கொண்டு விளங்கும் மூன்று மலைகளால் சூழப்பட்டு திருகோணமலையில் அமைந்துள்ள தேவார புகழ் பெற்ற சிவன் தலமான திருக்கோணேஸ்வரத்தின் நேரடி பார்வையில் சிவ பூமியில் அமைந்துள்ளது.

பல நூறு வருடங்களாக தன்னை நாடி வரும் அடியார்களின் உடல்களை இன்பம் நல்கி என்றும் வற்றா செல்வங்களையும் வளமான வாழ்வும் அருளி ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ விஸ்வநாத சுவாமி சிவன் ஆலயம் அடியார்களின் தர்ம நீதி கொண்டு குதித்து பெற்று புதிய ராஜகோபுரம் அமைக்கப்பெற்று நிகழும் உத்திராயாணம் எதிர்வரும் தை மாதம் 14ஆம் நாள் 2% .01.2022 வியாழக்கிழமை காலை 09.28 மணி முதல் முற்பகல் 11 வரையான முகூர்த்தத்தில் ஆறாவது மகாகும்பாபிஷேகம் நிகழ ஸ்ரீ விஸ்வநாத சுவாமி திரு திருவருள் கொண்டுள்ளார்.

இக்கோயிலின் வரலாற்றை ஆராய்வோமானால் 1815 ஆம் ஆண்டுகளில் பின்னர் பெனாரஸ் (காசி) என்னும் புனிதத் தலத்தில் இருந்து வந்து துரவி ஒருவரால் செக்கடி தெரு என அழைக்கப்பட்ட தற்போதைய மத்திய வீதியில் அமைந்துள்ள (அன்பு இல்லம்) அந்தக் காலப்பகுதியில் மடமாக அமையப் பெற்றிருந்த வளாகத்தில் கோணேசப் பெருமானின் நேரடிப் பார்வையில் வைத்து ஒரு லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டு வந்தது.

அதனைத் தொடர்ந்து 1829 களில் சொர்னலிங்க முதலியார் எனப்படுபவர் செங்கல் பண்னை எனும் அழைக்கப்பெற்ற தற்போதைய சிவன் கோவில் அமைந்துள்ள இடத்தில் பிரதிஷ்டை செய்தார்.

இவ் ஆலயம் அமைந்துள்ள இடத்தையும் அதனை சூழவுள்ள 11 1/2 ஏக்கர் காணியையும் அந்த ஆலயத்துக்கு வழங்கிங்கியிருந்தார்.

1946ஆம் ஆண்டு நவம்பர் 11ஆம் திகதி அப்போதைய நிர்வாகத்தில் ஏற்பட்ட முரண்பாட்டுக் ஆக போடப்பட்ட உதவி அரசாங்க அதிபர் ஆணையத்தின் படியே இந்த தரவுகள் இங்கு கூறப்படுகின்றது என கோவிலின் நிர்வாக சிரேஷ்ட உறுப்பினரும் சிவன் கோவில் ஆவணங்கள் தொடர்பான ஆய்வாளருமான சன்முகநாதன் விஜயநீதன் கூறினார். அவர் மேலும் வரலாறு தொடர்பான சிலவிடயங்களை பகிரும்போது.., இத்துடன் தற்போதய அன்பு இல்லம் அமைந்துள்ள காணியும் அதனை சுற்றியுள்ள காணிகள் இக்கோவில்லுக்கு செய்தமானதாகவே தற்போது வரைக்கும் இருந்து வருகின்றது. இது தொடர்பான ஆவனங்களை தற்போதய நிர்வாக சபையினர் கைபொற்றியைள்ளனர். 1983, 1990 களில் நாட்டில் நடந்த இன குழப்பங்களின் போது கோவில் உடைக்கப்பட்டது, எரிக்கப்பட்டது. அதனை ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஐந்தாம் ஆண்டு பொலீஸ் நிலையத்தில் முறைபாடு செய்து உறுதிபடுத்தபட்டது. மேலும் சில கோவில்தொடர்பான ஆவனங்கள் தேடுவதாகவும் இதனை அறிந்தவர்கள் உதவுமாரும் அவர் கேட்டுக்கொண்டார்.

1829 முதல் கும்பாபிஷேகத்தை அவருடைய தலைமையில் சொர்னலிங்க முதலியார் நடத்தினார். பின் இரண்டாவது கும்பாபிஷேகத்தை 1894 இல் வன்னியசிங்கம் அவர்களின் தலைமையில் நடத்தினார்கள் அதன் பிற்பாடு 1909 ஆம் ஆண்டு மூன்றாவது கும்பாபிஷேகத்தை அகிலேஷ் பிள்ளை என்பவரின் தலைமையில் நடத்தினார்கள் 08.0%.195% களில் நான்காவது கும்பாபிஷேகத்தை இராமலிங்கம் அவர்களின் தலைமையிலும், 24.06.1999 ஐந்தாவது கும்பாபிஷேகத்தை கணேசலிங்கம் அவர்களின் தலைமையிலும், 27.01.2022 வியாழக்கிழமை அன்று ஆறாவது கும்பாபிஷேகம் க.செல்வராஜா (சுப்ரா) அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்வரலாற்று சிறப்புமிக்க ஆலயமானது இளைஞர்களை கொண்டுள்ள தொண்டர்சபை ஒன்றினை உருவாக்கி அதற்கென தனி உபவிதிகளை உருவாக்கி அமைந்துள்ளமை ஒரு சிறப்பம்சம். மற்றும் இனத்தின் விடியலுக்காய் நடைபெற்ற தியாகி திலிபன் அவர்களின் உண்ணாவிரத போரடரடத்தில் பங்குகொள்ளும் முகமாக கிருபா அவர்களின் உண்ணாவிரதபோராட்டமும் இவ் ஆலய முற்றலில் முன்னெடுக்க் பெற்றதும் வரலாற்று முக்கியமாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

தற்போதய நிர்வாக சபையினயில் க.செல்வாராஜா, செயலாளராக தி.தவசிலிங்கம், உப தலைவர்களாக வி.புஸ்பராஜா, த.சர்வானந்தம், பொருளாளராக ம.பாலசிங்கம், உப செயலாளராக வி. சீனிவாசன் மற்றும் சிரேஷ்ட உறுப்பினர்கள், பொதுமக்கள், இளைஞர்கள் மற்றும் லைக்கா சர்வதேச நிருவனம் ஆகியோரின் உதவியுடன் புதிய ராஜகோபுரம் அமைக்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தராக பதவி உயர்வு பெற்றுள்ள பேராசிரியர் வி .கனகசிங்கத்தை வாழ்த்தி வரவேற்கும் நிகழ்வு











கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தராக பதவி உயர்வு பெற்றுள்ள பேராசிரியர் வி .கனகசிங்கம் பேராசிரியரை வாழ்த்தி வரவேற்கும் நிகழ்வு மட்டக்களப்பில் நடைபெற்றது.

மங்களவிளக்கேற்றப்பட்டு மௌன இரைவணக்கத்துடன் ஆரம்பமான நிகழ்வில் பேராசிரியர் வி .கனகசிங்கத்தின் பதவி உயர்வுக்கு வாழ்த்துக்கள் வழங்கியதுடன் சிறப்புரைகளும் இடம்பெற்றது . இதனை தொடர்ந்து சிவில் சமூகத்தினால் உபவேந்தரை கௌரவிக்கும் வகையில் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பு அளிக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூகத்தின் ஏற்பாட்டில் சிவில் சமூகத்தின் தலைவர் மாமாங்கராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவட்ட சிவில் சமூகத்தின் போசகரும் , மறை மாவட்ட ஆயருமான கலாநிதி ஜோசெப் பொன்னையா ஆண்டகை உட்பட நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்குப்பல்கலைக்கழக வேந்தர் வைத்திய கலாநிதி வேல்முருகு விவேகானந்தராஜா, சிரேஸ்ட பேராசிரியர் சி.மௌனகுரு, கிழக்குப்பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அருட்பணி நவரெட்ணம் , பல்கலைக்கழக பேராசிரியர்கள் , வைத்தியர்கள் மாவட்ட சிவில் சமூகத்தின் உறுப்பினர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# நாவிதன்வெளிக்கோட்ட 1500 மாணவர்க்கு கோரோனா தடுப்பூசி

(காரைதீவு சகா)

நாவிதன்வெளி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பாடசாலைகளில் கல்விபயிலும் சுமார் 1500 மாணவர்களுக்கான முதலாவது பைசர் ரக கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டுவருகிறது.

12வயது முதல் 15வயதுக்குட்பட்ட சகல மாணவர்களுக்கும் இத்தடுப்பூசி பாடசாலை ரீதியாக ஏற்றப்பட்டுவருகிறது.

நாவிதன்வெளிப்பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் வினோதினி தட்சணாமூர்த்தி தலைமையில் இத்தடுப்பூசி ஏற்றும் செயற்றிட்டம் நாவிதன்வெளிக்கோட்டத்திலுள்ள சாளம்பைக்கேணி அஸ்ஸிறாஜ் தேசிய பாடசாலையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

அத்தருணம் அஸ்ஸிறாஜ் தேசிய பாடசாலை அதிபர் எஸ்.எம்.



எம்.யூசுப்பும் கலந்துகொண்டார்.

நாவிதன்வெளிப்பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் வினோதினி தட்சணாமூர்த்தி தகவல் தருகையில்:

எமது நாவிதன்வெளிப்பிரிவில் சுமார் 1500மாணவர்களுக்கு இன்று முதல் கொரோனா முதலாவது தடுப்பூசி படிப்படியாக பாடசாலை ரீதியாக ஏற்றப்படவிருக்கிறது.

அதேவேளை சுமார் 280 ஆசிரியர்களுக்கும் 2வது 3வது தடுப்பூசி வழங்கவும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. நாம் செல்லும் பாடசாலையில் உள்ள ஆசிரியர்கள் இத்தடுப்பூசியை கட்டாயம் பெற்றுக்கொள்ளவேண்டும்.

எமது கோட்டத்தில் இதுவரை ஓரிரு பாடசாலைகளில் ஓரிரு பிள்ளைகளுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

எனவே சுகாதாரத்திணைக்களம் விடுத்துள்ள சுகாதார நடைமுறைவிதிகளை கடைப்பிடிக்கும் அதேவேளை உரியதரப்பினர் தடுப்பூசியை உரிய வேளையில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அப்போது நீங்கள் காப்பாற்றப்படுவதோடு ஏனையவர்களையும் காப்பாற்ற முடியும் என்றார்.

# இளம் தளிர் விளையாட்டு கழத்திற்கு ஒரு தோகுதி விளையாட்டு உபகரணங்கள்






(க.ருத்திரன்)

மட்டக்களப்பு கோட்டை முனை விளையாட்டு கிராமத்தினால் பேத்தாழை இளம் தளிர் விளையாட்டு கழத்திற்கு ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

கிரிக்கட் கடினப்பந்து விளையாட்டுக்கான ஆடுகள விரிப்பு மற்றும் விளையாட்டு உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டது.

மேற்படி கழகத்தின் செயலாளர் சி.சிறிகாந் குறித்த பொருட்கள் தேவையென விடுத்த வேண்டுகோளினையடுத்து அப்பொருட்கள் கழகத்தின் தலைவர் ந.நிமலராஜிடம் கையளிக்கப்பட்டது. இப் பொருட்களை புலம்பெயர் நாட்டில் வாழும் கோட்டை முனை விளையாட்டு கழகத்தின் உறுப்பினர் பே.ரமேஸ்குமாரின் அனுசரனையில் வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரின் இணைப்பு செயலாளர். சி.அகிலகுமார் அதிதியாகவும் கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை - 12

# கைப்பணிக் கலைத்துறைக் கலைஞர் செல்வராசா கமலநாதன்

**இன்றைய நவீனமயமாக்கப்பட்ட உலகில் பல்வேறு துறைகள் மிகத் துரித வளர்ச்சி அடைந்து வருகின்றது. அவற்றில் கலைத்துறையும் ஒன்றாகத் திகழ்கின்றது. அவ்வாறான கலைகளில் தங்களது திறமைகளை வெளிக் கொண்டு வருவதற்கு ஒவ்வொரு கலைஞனும் மிகுந்த முயற்சி செய்து வருகின்றான். அவ்வாறமைந்த கலைத்திறமைகளில் கைப்பணிக் கலைத்துறையும் ஒன்றாகத் திகழ்கின்றது. இத் திறமையைக் கொண்டவர்கள் மிகுந்த பொறுமைசாலிகளாகவே இருப்பர். காரணம் இவ் கலைத்துறையானது ஒரு இடத்திலிருந்த வண்ணமே செய்தல் வேண்டும். அந்த வகையில், வேலை நேரம் தவிர்ந்த மிகுதி நேரத்தை சரியான முறையில் பயன்படுத்துவதற்காக களிமண், சீமெந்து, மரம், போன்ற பிரதானப் பொருட்களைக் கொண்டு பல வகைப்பட்ட உருவங்களைப் படைத்து வரும் தம்பலகாமம் பிரதேசத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா கமலநாதன் கலைஞரை சுபீட்சம் நிகழ்நிலை பத்திரிகையின் திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை என்ற பகுதிக்காக அவரை சந்தித்த தருணத்தில் அவர் எம்முடன் பகிர்ந்து கொண்ட செவ்விகாணலை இங்கு காணலாம்.**

### 1. உங்களைப் பற்றிய சிறு அறிமுகம்?

எனது அப்பாவின் பெயர் செல்வராசா. அம்மாவின் பெயர் சந்தானலெட்சுமி. எனது பாடசாலைக் கல்வியை தம்பலகாமம் ஆதி கோணேஸ்வரா மகா வித்தியாலயத்தில் பயின்றேன். எமது பரம்பரைத் தொழிலான வேளாண்மையிலும், தச்சுத் தொழிலும் ஈடுபட்டு வருகின்றேன். எனது மனைவியின் பெயர் கலாதேவி. எனக்கு லோஜினி, பிரதாப், சரணியா, மிதுனா என்று நான்கு பிள்ளைகள் உள்ளனர். இவ்வாறான ஒரு அன்பான, அழகிய குடும்பம்.

### 2. கைப்பணிக் கலைத்திறமை பற்றிய ஆர்வம் உங்களிடம் எவ்வாறு ஏற்பட்டது?

ஒவ்வொருவருக்குள்ளும் ஒவ்வொரு திறமை காணப்படுவதென்பது மிகவும் உண்மையான கருத்தாகும். அவ்வாறான கலைத்திறமைகளைக் கொண்ட கலைஞர்களையும், அவர்களது கலைப்படைப்புக்களையும் பார்க்கும் போது எனது உள்ளத்திலே ஒரு வகையிலான ஆனந்தமும், ஆசையும், ரசனையும் ஊன்றிக் கொள்ளும். அத் தருணத்தில் ஏன் நானும் எனக்குள் இருக்கும் திறமையை இனங்கண்டு வெளிப்படுத்த முயற்சி செய்யலாம் என்றும்;, மேலும் வேலை நேரம் தவிர்ந்த மிகுதி நேரத்தை அத் திறமையினைக் கொண்டு சரியான முறையில் பயன்படுத்தலாம் என்றும் இவ்வாறாக எனக்குள் பல வினாக்கள் ஏற்பட்டன. அவ் வினாவின் நிமித்தம் இவ் ஆர்வம் ஏற்பட்டது எனக் கூற முடியும். அந்த ஆர்வம் எனக்கு நானே சரியான முறையில் பயிற்சிகளை மேற்கொண்டு தக்க சந்தர்ப்பத்தில் முழுமையடைந்து உருவங்களை உருவாக்க வழி வகுத்தது. முதலில் சித்திரம் வரைவதில் தான் எனது கலைப்பயணம் ஆரம்பித்தது. அதன் பின் களிமண்ணினை பிரதானப் பொருளாகக் கொண்டு பல உருவங்களைப் படைக்க ஆரம்பித்து, பின்னர் படிப்படியாக சீமெந்து, மரம் போன்றவற்றை பிரதானப் பொருட்களாகக் கொண்டு உருவங்களை உருவாக்கினேன்.

### 3. களிமண், சீமெந்து, மரம் போன்றவற்றை பிரதானப் பொருட்களாகக் கொண்டு எவ்வளவு காலமாக, எவ்வகையிலமைந்த உருவங்களை செய்து வருகின்றீர்கள்?

எனது 46 ஆவது வயதிலிருந்து தற்போது 10வருடங்களுக்கு மேலாக உருவங்களைச் செய்து வருகின்றேன். சிறியளவிலான கடவுள் உருவச்சிலை, மிருகங்கள், பறவைகள், கடல்வாழ் உயிரினங்கள், பூச்சிகள், சிறுவர்களுக்கான விளையாட்டுப்பொருட்கள், இவ்வாறாக பல வகைப்பட்ட உருவங்களைச் செய்து வருகிறேன்.

### 4. களிமண்ணினைக் கொண்டு ஓர் உருவத்தை செய்யும் போது எவ்வாறான செயற்பாடுகளையும், அதனை முழுமையாக அமைப்பதற்கு எவ்வளவு நாட்களும்; தேவைப்படுகின்றன?

முதற் செயற்பாடாக எவ் உருவத்தை செய்யப்; போகின்றோமோ அவ் உருவத்தின் வரைபட அமைப்பினை முன் நிறுத்திக் கொள்ள வேண்டும். இரண்டாவது செயற்பாடாக தேவைக்கதிகமாகவே களிமண்ணினை எடுத்துக் கொள்ள வேண்டும். காரணம், நீர் ஊற்றிக் குழைக்கும் சந்தர்ப்பத்தில் ஈரத்தன்மை ஏற்ற அளவை விட அதிகரித்து விட்டால் அதனை ஈடு செய்ய முடியும். இதற்கான களியை வயல்வெளியில் இருந்தே எடுக்கின்றேன். இதனை கடும் களி என்று கூறுவர். இதுவே உருவம் செய்வதற்கு தகுந்த களி மண்ணாகும். இறுதியாக களியைக் கொண்டு உருவத்தை





தொகுப்பு :-
திருமலை தட்சாயினி ஞானசங்கரன்

வெயிலில் வைத்து 3 நாட்கள் உலர வைக்க வேண்டும். பின் அதற்குரிய தகுந்த வர்ணத்தை பூசி மேலும் 2 நாட்கள் உலர வைக்க வேண்டும். இவ்வாறாக ஒரு உருவத்தை முழுமையாக செய்து முடிப்பதற்கு 5 நாட்கள் தேவைப்படும்.

### 05. உங்களது பிரதேச மக்களிடம் இவ் உருவங்களின் தேவைப்பாடு கொண்டு செல்லப்படுகின்றதா? அவ்வாறாயின் அது பற்றி?

ஆம் கொண்டு செல்லப்படுகிறது. சிறுவர்களுக்கான கண்காட்சி, பாடசாலையில் நடைபெறும் கண்காட்சி, பல்வேறு விதமான ஆக்கப் போட்டிகள் என்ற பல நிகழ்ச்சிகளின் நிமித்தம் அவர்களுக்குத் தேவையான உருவங்களை என்னிடம் கூறி செய்து எடுத்து செல்கின்றனர். மற்றும் வீடுகளில் அலங்காரப் பொருட்களாக வைத்து அழகு சேர்ப்பதற்கும் கொண்டு செல்கின்றனர். மேலும் மாபெறும் போட்டி நிகழ்ச்சிகளில் வைக்கப்பட்ட சில பெரியளவிலான வித்தியாசமான உருவங்கள் வெற்றியீட்டப்பட்டு பரிசில்களையும் தட்டிச் சென்றுள்ளன. இது எனக்கு கிடைத்த சிறு வெற்றி எனக் கூற முடியும்.

### 06. இக் கலைப் படைப்புக்கள் மூலம் வருமானம் கிடைக்கப்படுகின்றதா?

மிகக் குறைந்தளவிலே வருமானம் கிடைக்கப்படுகின்றது. காரணம் எமது தம்பலகாமம் பிரதேசத்தில் உள்ளவர்களே பெரும்பாலும் உருவங்களை செய்வதற்கு தேடி வருகின்றனர். மற்றும் அவர்களில் நான்கில் மூன்று பங்கினர் மிகவும் தெரிந்தவர்கள் அவர்களுக்கு இலவசமாகவே உருவங்களைச் செய்து கொடுக்கின்றேன். ஒரு சில தெரியாதவர்களின் மூலமே குறிப்பிட்டளவிலான வருமானம் கிடைக்கப்படுகின்றது. அவ்வாறான சந்தர்ப்பமும் மிகக் குறைந்தளவிலே காணப்படுகின்றது.

### 07. இக்கலைத் திறமையைத் தவிர, வேறு திறமைகள்; பற்றி?

ஒரு படத்தின் கற்பனையை வைத்துக் கொண்டு அதன் அச்சு மாறா வகையில் அவ் வண்ணமே வரைவேன். மற்றும் சவர்க்காரத்தினைக் கொண்டு பல வகையான உருவ வடிவமைப்புக்களையும் உருவாக்குவேன். மேலும் வீசியெறியப்படுகின்ற கழிவுப் பொருட்களை வைத்துக் கொண்டும் சில வகைப் பொருட்களை உருவாக்குவேன். ஆடல்,பாடல் போன்ற துறைகளிலும் திறமையுள்ளது. பல மேடைகளில் பாடியுள்ளேன் மற்றும் அறநெறி வீதி ஊர்வலம், நூற்றாண்டு விழா, கோயிற் திருவிழாக்கள், நவராத்திரி, சிவராத்திரி போன்றவற்றின் கலை நிகழ்வுகளிலும் பங்குபற்றியுள்ளேன்.

### 08. உங்களது கலைத்துறையில் உள்ள ஆதங்கம்?



எனது கலைக்கான சரியான களம் இல்லை. திறமை மிக்க கலைஞர்கள் இனங்காணத் தவறிவிடுகிறார்கள். சரியான திறமையில்லாதவர்களுக்கே பாராட்டுக்களும், அங்கீகாரமும் கிடைக்கப் பெறுகிறது. மேலும் என்னால் உருவாக்கப்படுகின்ற உருவங்களை சந்தைப் படுத்துவதற்கான இடமும் இல்லை.

### 09. இத்துறையில் உங்களுக்குக் கிடைத்த வெற்றிகள், பாராட்டுக்கள் பற்றி?

குறிப்பிட்டு சொல்லக் கூடிய வகையிலான வெற்றிகள் கிடைக்கப் பெறவில்லை. எனினும் பாராட்டுக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. தம்பலகாமம் கலைக்கதிர் மன்றத்தினால் பாராட்டப்பட்டுள்ளேன். எனினும் எனது திறமைக்கான அங்கீகாரம் இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை என்பதை குறிப்பிட்டு சொல்ல வேண்டியதாகவுள்ளது.



### 10. தற்போது கைப்பணித்துறையில் ஆர்வம் ஏற்பட்டு இளைய தலைமுறை தங்களது திறமைகளை வெளிக்காட்டி வருகின்றனர். அந்த வகையில் வளர்ந்து வரும் இளைய தலைமுறையினருக்கு நீங்கள் கூற விரும்புவது?

இது மிகவும் உண்மையான கருத்தாகும். தற்சமையம் வளர்ந்து வரும் துறைகளில் கைப்பணித்துறை மிக முக்கிய இடம் வகிக்கின்றது. இளைய தலைமுறையினருக்கு கைப்பணிக்கலைத் துறையின் மீது ஏற்பட்ட அதீத ஆர்வத்தின் பிரகாரம் அவர்களை அவர்களுக்குள்ளே இருக்கும் திறமையை வெளிக் கொண்டு வர வாய்ப்பை ஏற்படுத்தியது. அவ்வாறான திறமை வெளிக் கொண்டு வரப்பட்டாலும், அவர்களை வெளிச்சத்திற்கு கொண்டு வருவதற்கான களம் மிகக் குறைந்தளவிலே காணப்படுகின்றது. இவர்களுக்கான தேடலையும், சந்தர்ப்பத்தையும் அதற்குரிய அரச அமைப்புக்களும், ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் கரம் கொடுக்க வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பம் கிடைக்கும் வரை திறமைமிக்க கலைஞர்கள் துவண்டு விடாமல் மென்மேலும் முயற்சியெடுக்க வேண்டும். தோல்வியே வெற்றியின் முதற் படியாகும். சரியான திறமையிருந்தால் உலகமே ஒரு நாள் உன்னைப் போற்றும். அந்த வகையில் வாய்ப்பு கிடைக்காமல் காத்திருக்கும் எம் போன்ற கலைஞர்களுக்கு சிறந்த களம் அமைத்துக் கொடுத்து வரும் சுபீட்சம் பத்திரிகைக்கு மனதார நன்றியினைத் தெரிவிப்பதோடு, இப் பணித் தொடர வாழ்த்துகின்றேன்.

இன்றைய காலகட்டத்தில் ஒவ்வொரு மனிதனும் தனக்குள் இருக்கும் ஏதாவது ஒரு திறமையை வெளிக் கொண்டு வருவதற்கு முயற்சியும், பயிற்சியும் எடுத்து வருகின்றான். அவ்வாறான திறமைகளின் மூலம் பல கலைகளும் வளர்ந்து வருகின்றன. அவ்வகையிலமைந்த திறமைகள் மூலமாக வந்த கலைகளில் கைப்பணிக் கலையும் இன்று அனைவராலும் வரவேற்கப்பட்டு வருகின்றது. கைப்பணிக்கலை மக்கள் மத்தியில் வரவேற்கப்பட்டு வந்தாலும் அத்துறைசார் கலைஞர்களுக்கான வெற்றி வாய்ப்புக்கள் கிடைக்கப் பெற்று களம் அமையப் பெறுவதற்கான சந்தர்ப்பம் குறைவான நிலையிலே உள்ளது என்பது சுட்டிக் காட்டக்கூடிய விடயமாகும். அவ் வகையில், செல்வராசா கமலநாதன் கலைஞரும் பல திறமைகளைக் கொண்டும் அத்துறை மீதான களம் அமையப் பெறாமல் வெற்றி வாய்ப்பிற்காக காத்துக் கொண்டிருக்கின்றார். ஆகவே இவர் போன்ற திறமைமிக்க கைப்பணித்துறைக் கலைஞர்களுக்கான களம் கிடைக்கப்பெற்று அவர்களுக்கான அங்கீகாரமும் கிடைக்கப்பெற வேண்டுமென்பது உண்மையான விடயமாகும்.

ஆகவே, திருக்கோணமலை மண்ணுக்கு பெருமை சேர்க்கும் கலைகளில் கைப்பணிக் கலையும் ஒன்றாகத் திகழும் சந்தர்ப்பத்தில் இக் கலைஞரின் திறமையும் அடையாளப்படுத்தப்பட்டு அவருக்கான பெருமையும், புகழும் கிடைக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**தொடரும் கலைஞர்களுக்கான தேடலின் பயணத்தோடு**



# பாரத மாதாவின் மடியில் தஞ்சம்கோரி அடைக்கலமான எங்களை மனிதாபிமானம் எனும் நீதி தேவதையின் முன் நிறுத்தி தேசிய இனமாக அங்கீகரிப்பாளர்களா?

# இலங்கை அகதியின் உள்ள குமுறல்



(வாஸ் கூஞ்ஞ)

இந்திய ஜனநாயகப் பேரரசின் 73 வது ஆண்டு குடியரசு தின விழாவை கொண்டாட பாரத தேசமே தயாராகிக்கொண்டு இருக்கிற இவ்வேளையில் 'அந்நியன்'என்று கூறி வாய்ப்புகள் மறுக்கப்பட்டது. நட்பு வட்டத்தில் பெருமையோடு உலா வந்த நான் அப்போது முதல் கூனிக்குறுகி தனிமைப்படுத்தப்பட்டவனாக ஆனேன். எனக்குள் ஏற்பட்ட விரக்தியின் வீரியத்தை நிச்சயம் வார்த்தைகளால் ஒருபோதும் விவரிக்க முடியாது. கல்வியின் மூலம் அகதி நிலையை வெல்லலாம் என்ற கனவுகளோடு படித்த எனக்குஇ அந்த நம்பிக்கை பகல் கனவாகவே ஆனது. இன்றுவரை அது என் சமூகத்தில் ஒரு கானல் நீராகவே தெரிகிறது தொடர்கிறது என திருவண்ணாமலை மாவட்டம் கஸ்தம்பாடி இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமணில் வசிக்கும் இலங்கை தமிழர் ஒருவரான டேவிட் அனோஜன் தெரிவிக்கையில்;

இந்திய ஜனநாயகப் பேரரசின் 73 வது ஆண்டு குடியரசு தின விழாவை கொண்டாட பாரத தேசமே தயாராகிக்கொண்டு இருக்கிறது. இந்தியாவில் முடியாட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துஇ குடியாட்சி மலர்ந்த நாளான ஜனவரி 26 ஆம் நாள் ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. நாடெங்கும் அனைத்து பள்ளிகளிலும்இ கல்லூரிகளிலும்இ அலுவலகங்களிலும் தேசிய கீதம் பாடிஇ கொடியேற்றிஇ இனிப்புகள் வழங்கி இவ்விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு மனிதனும் சுதந்திரக் காற்றை சுவாசிக்க வேண்டும் என அரும்பாடுபட்ட சுதந்திரப் போராட்ட தியாகிகளை நினைவுக்கூரும் நாளாக இந்த நாள் கொண்டாடப்படுகிறது. மக்களால் மக்களுக்காக என்பதே குடியரசு தத்துவத்தின் கோட்பாடு. இந்தியாவிற்குள் அனைவருக்கும் சம பாதுகாப்புஇ வேறுபாடுகள் இன்றி சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கோட்பாட்டை இந்த குடியாட்சி சாசனம் வலியுறுத்துகிறது என்று.. பள்ளியில் நடைபெற இருந்த குடியரசு தின விழா பேச்சுப்போட்டிக்காக தயாராகி வந்த எனது 8 வயது மகள்இ திடீரென சோகமாக இருந்தால். காரணம் கேட்டால், கொரோனா காரணமாக பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டு உள்ளதால்இ இந்த நிகழ்ச்சியில் தன்னால் இந்த ஆண்டு கலந்துகொள்ள முடியாமல் போய்விடுமோ என்ற கவலை அவளை ஆட்கொண்டு இருப்பதை விசாரித்தல் மூலம் அறிந்துகொண்டேன்.

அவளுக்கு ஆறுதல் கூற வார்த்தைகள் இன்றி, அகவை எட்டில், மிட்டாய் வாங்கி சாப்பிடுவதிலும் விடுமுறையை ஜாலியாக சக மாணவர்களுடன் கழிப்பதிலும் தொடங்கிய என் பள்ளி நாட்களை அவள் நினைவூட்டுவதாக இருந்தது.

இலங்கையின் உள்நாட்டு போரின் காரணமாக அங்கு சுதந்திர காற்றை சுவாசம் செய்யும் பாக்கியம் வேரறுக்கப்பட்டு, உயிர்காக்க தஞ்சம் கோரி இந்திய மண்ணில் அடைக்கலாமானவர்களில் நானும் ஒருவன். அகவை எட்டில் ஆரம்பமாகின்றன எனது பள்ளி நாட்கள். பேச்சு மொழியின் நடையை தவிர வேறு எதுவும் வேற்றுமை தெரியாததால் கற்றல் என்பது இனிமையாய் தொடங்கியது.

ஆண்டுகள் செல்லச்செல்ல தினமும் பள்ளியில் நடக்கும் காலை வழிபாட்டில் 'இந்தியா என் தாய்நாடுஇ இந்தியர் என்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன்.' என்றும், தேசிய கீதத்தை உணர்வில் கலந்து பாடுவதிலும் ஈர்க்கப்பட்டுஇ மெல்ல மெல்ல தேசிய உணர்வும் தேச பக்தியும்இ தேசியத் தலைவர்களின் வாழ்க்கை வரலாறும் படிப்படியாக எனது உள்ளத்தில் ஆழமாக பதிகிறது. வேற்றுமையில் ஒற்றுமை காணும் தேசத்தில் நானும் ஒருவனாக உணரத்தொடங்கினேன்.

ஆண்டுகள் பல கடந்த பின்பு, மேல்நிலை வகுப்பு பருவத்தில் நடந்த தேசிய தின விழாக்களில் ஈடுபாட்டுடன் கலந்துகொண்டு 'சுதந்திரம் என்பது தூரிகையின் சித்திரமல்ல அது உதிரங்கள் ஈன்றெடுத்த வரலாற்று சரித்திரம் என்போம்' என்றும் 'வாக்கு என்பது சாமானியனின் வலிமை மிகுந்த பேராயுதம்' என்றும் கவிதை பாடி அனைவரின் பாராட்டையும் பெற்றதில் அளவு கடந்த மகிழ்ச்சி அடைந்தேன். சக மாணவர்கள் மத்தியில் ஒருவித பெருமித உணர்வுடன் வலம் வந்தேன். மற்றவர்களைவிட சிறப்பாகவும் தரமானதாகவும் இருக்க வேண்டும் என்று மூவர்ணக் கொடியை தேடித்தேடி வாங்கி சட்டைப்பையில் குத்திக்கொள்வேன். இதயப்பூர்வமாக அதை நேசிப்பதன் அடையாளமாகவே அது எனக்கு இருந்தது.

கல்லூரியில் பயிலும்போதும் அந்த தேசிய உணர்வு மென்மேலும் வளர்ந்தது.

கல்லூரிப் படிப்பை நிறைவு செய்தபின்இ உடன் படித்த நண்பர்கள் அரசுத்துறை களிலும்இ தனியார் நிறுவனங்களிலும்இ மேற்படிப்பு மற்றும் வேலைக்காக வெளிநாடுகளுக்கும் செல்லத் தொடங்கினார்கள். எல்லோருக்கும் வாய்ப்புகள் கொடுக்கப்படும்போது என்னை மட்டும் 'அந்நியன்' என்று கூறி வாய்ப்புகள் மறுக்கப்பட்டது. நட்பு வட்டத்தில் பெருமையோடு உலா வந்த நான் அப்போது முதல் கூனிக்குறுகி தனிமைப்படுத்தப்பட்டவனாக ஆனேன். எனக்குள் ஏற்பட்ட விரக்தியின் வீரியத்தை நிச்சயம் வார்த்தைகளால் ஒருபோதும் விவரிக்க முடியாது.

கல்வியின் மூலம் அகதி நிலையை வெல்லலாம் என்ற கனவுகளோடு படித்த எனக்குஇ அந்த நம்பிக்கை பகல் கனவாகவே ஆனது. இன்றுவரை அது என் சமூகத்தில் ஒரு கானல் நீராகவே தெரிகிறது தொடர்கிறது.

சிறு சங்கிலியால் கட்டுண்ட யானை தன் பலத்தை அறியாமல் அதற்கு அடிமை ஆவதுபோல்இ அத்தனை திறமைகளும் இருந்தும் அகதி என்ற அடைமொழியும் சூழலும் தும்பிக்கையின் பலம் அறியா யானையைப் போல்இ நம்பிக்கை இழந்து நம்மை நாமே குருக்கிக் கொண்டோம்.

கடந்த 32 ஆண்டுகளில்இ உள்ளூராட்சி தேர்தல்இ சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற தேர்தல்கள் என எத்தனையோ தேர்தல்கள் நம்மை கடந்து சென்றுள்ளன. இந்திய தேசமே கொண்டாடும் சிறப்பு வாய்ந்த ஒரு மாபெரும் ஜனநாயக திருவிழாவில் நாம் மட்டுமே விதிவிலக்காக வெறும் பார்வையாளராகவே இருந்து வருகிறோம்.

வாக்குரிமை என்பது ஒரு தனி மனிதனுக்கு இந்திய அரசியலமைப்புச் சட்டம் வழங்கியிருக்கிற பேராயுதம். தன்னை ஆள்பவர் யார் என்பதை தானே தீர்மானிக்கும் ஓர் வலிமை வாய்ந்த பிரம்மாஸ்திரம் அது. அந்த கடமையைக்கூட செய்ய விரும்பாமல்இ செய்யாமல் கடந்து போகும் எத்தனையோ பேர் மத்தியில் கையறு நிலையில் நிற்கும் மக்கள் கூட்டமாக நாம் மட்டுமே அதற்காக ஏங்கித் தவிக்கிறோம்.

இந்திய அரசியல் வரலாற்றில் தேர்தல்கள் மிக முக்கிய இடம்பெறுகின்றன. மாறி மாறி ஆட்சிக்கு வரும் கட்சிகளாலதான் இந்த நாடு வேகமாக வளர்ந்து வருகிறது என்றால் அது மிகையல்ல. தேசத்தின் வளர்ச்சியிலும் நாட்டு மக்களின் முன்னேற்றத்திலும் அக்கறை கொள்ளாத, மக்கள் விரோத போக்கை ஆளும் அரசுகள் கையில் எடுக்கும்போது, அதை மக்கள் தங்கள் வாக்கு எனும் பேராயுதத்தால் வீழ்த்தி புதிய அரசுகளை அமைத்து வருவது வரலாற்றுக் கண்கூடு.

தனது ஜனநாயக கடமையாக அந்த ஓட்டை செலுத்திவிட்டு வரும் ஒவ்வொருவரும் அதன் அடையாளமாக தங்கள் விரலில் தடவியிருக்கும் கருப்பு மையை பார்க்கும் போதும்இ பிறருக்கு காண்பிக்கும்போதும், என்னுடைய ஆள்காட்டி விரல் மட்டும் என்னைப் பார்த்து 'நீ யார்? உனக்கு அந்த கடமை இல்லையா?' என்று கேட்கும்போது உரிமை இழந்தவனின் கொதிக்கும் இரத்தம் எரிமலை பிளம்பைவிட வீரியம் மிக்கது என்பதை உணரச் செய்யும்.

தேர்தல் சமயத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள், தங்கள் தீவிர பிரச்சாரத்தின்போது கிராமம் கிராமாக, வீடு வீடாக சென்று வாக்கு சேகரிப்பார்கள். ஆனால், அகதிகள் முகாமை மட்டும் கண்டுகொள்ளாமல் கடந்து செல்லும்போதுஇ நாம் அனைவரும் தீண்டத்தகாதவர்களா? என்று எண்ணத் தோன்றும். வெற்று வாக்குறுதிகளையாவது கொடுத்துவிட்டு போயிருந்தாலும்இ நம்மையும் சக மனிதர்களாக மதித்தார்கள் என்று சுய ஆறுதல் சொல்லி மகிழ்ந்திருப்போம். தலைவனையும் தலை வணங்க வைக்கும் வலிமையும் தேர்ந்தெடுக்கும் ஆற்றலும் ஒவ்வொரு வாக்காளனின் வாக்குக்கும் உண்டு என்பதை அப்போதுதான் உணர முடிந்தது.

ஒவ்வொரு தேர்தலிலும் வாக்குரிமை இருந்தும் அதை செலுத்தாதவர்களின் எண்ணிக்கையை விடஇ மிகக் குறைவான எண்ணிக்கையில் இருக்கும் ஓர் புலம் பெயர் சமூகத்தின் வேண்டுதலைஇ ஏன் அரசுகள் பரிசீலிக்கக்கூடாது? பணத்திற்காக தன் வாக்கை விற்பவன் சட்ட விரோதியா?? வாக்குரிமைக்காக ஏங்கும் ஒரு சமூகம் சட்ட விரோதியா? என்ற கேள்வி ஐயத்துடன் மனதில் தோன்றி மௌனத்துடன் கேட்கத்தோன்றுகிறது.

ஒவ்வொரு தேர்தல் முடிவுகளின் போதும்இ வாக்களித்தவர்களை விட வாக்குரிமையற்று இருக்கும் மக்களாகிய நாம்தான் வெற்றி தோல்விகளை அதிக ஆர்வத்துடன் எதிர்பார்த்து காத்திருப்பவர்கள். நாம் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள் என்பதால்இ எந்த கட்சி வெற்றி பெற்று ஆட்சி அமைக்கிறதோஇ அந்தக் கட்சியை இயல்பாகவே வரவேற்கும் மனநிலை கொண்ட மக்கள் கூட்டத்தினராகவே நாம் இருக்கிறோம். ஏனென்றால்இ அனைத்து கட்சிகளின் தேர்தல் அறிக்கையிலும் பிரச்சாரத்திலும் இலங்கைத் தமிழர்கள் கண்டிப்பாக ஒரு முக்கிய பேசுபொருளாகவே இடம்பெற்று வருவதே இதற்குக் காரணம்..

அரசியலுக்காக தேர்தல் அறிக்கைகளில் இடம் பெறும் நாம்இ அரசியலமைப்பு சட்டத்தில் ஏன் இடம்பெறக்கூடாது? அதற்கான ஒரு வாய்ப்பு உருவாகும் என்றே ஒவ்வொரு ஆட்சியும் மாறும்போது அவர்களை நம்பிக்கையோடு மனதார வரவேற்று இறுதியில் ஏமாற்றம் அடைந்து வந்திருக்கிறோம். நம்பிக்கை வைப்பதும்இ ஏமாற்றம் அடைவதும்இ இயலாமையை நினைத்து வருந்துவதும் மட்டுமே எங்களுக்கு முன் இருக்கும் உரிமைகள் என்றாகிப் போயுள்ளது.. எல்லாவற்றிக்கும் காலம்தான் ஒரு தீர்வினை உருவாக்கும் என்ற நிலையில்இ தற்போது அதற்கான ஒரு களமும்இ காலமும்இ அரசும் தமிழ் நாட்டில் அமைந்திருப்பது அனைவருக்கும் நம்பிக்கை அளித்துள்ளது.

டீக்கடையில் வேலை பார்த்த ஒரு சிறுவன் இந்த



நாட்டின் பிரதமராக வரும் அளவிற்கு மிக உன்னதமான ஜனநாயக அரசியல் யாப்பை கொண்டுள்ள பாரத தேசத்தில் ஒரு அகதிக்கு வாக்களிக்கும் உரிமையை ஏன் பரிசீலிக்கக்கூடாது? என்பதே எங்களது நீண்ட நாள் கோரிக்கையாகும்.

இந்தியாவில் பல்வேறு நாட்டு அகதிகள் இருக்கிறார்கள்இ அனைவருக்கும் குடியுரிமை வழங்குவது சாத்தியமற்றது என பல்வேறு காரணங்களில் ஒன்றாக இதுவும் சொல்லப்படுகிறது. வரலாற்றுத் தொடர்புகளால்இ இனத்தால்இ மொழியால்இ கலாச்சாரம் மற்றும் பண்பாட்டால் என அனைத்தாலும் ஒன்றுபட்டு எந்த ஒரு காரணியாலும் வேறுபடுத்திப்பார்க்க முடியாத விதத்தில் ஒன்றுபட்டு தமிழ்நாட்டில் உள்ள தமிழர்களுடன் வாழும் ஒரு இனத்தைஇ பிற நாட்டு அகதிகளுடன் ஒப்பிட்டு பார்க்காமல்இ பாகிஸ்தானில் இருந்து வந்த இந்துக்களை துன்புறுத்தலுக்கு உள்ளான மத ரீதியிலான சிறுபான்மையினர் என்று கருதிஇ எப்படி இந்திய குடியுடிமை வழங்க முன்வந்ததோஇ அதே போன்று இலங்கைத் தமிழர்களையும் வரலாற்று ரீதியிலான தொடர்பு உள்ளவர்கள் என்ற ரீதியிலும்இ துன்புறுத்தலுக்கு உள்ளான சிறுபான்மையின தமிழர்களாகவும் கருதிஇ மனிதாபிமானத்துடன் இந்த பிரச்சினையை அணுகிஇ குடியுரிமை சட்டத்தின் ஊடாக வாய்ப்பளிக்க வேண்டும் என்பதே எங்கள் ஒவ்வொருவரின் எதிர்பார்ப்பும்.

முப்பது ஆண்டுகளுக்கு ஒருமுறை தலைமுறை மாறும் என்பது நியதி. அந்த விதத்தில்இ கடந்த முப்பத்தி இரண்டு ஆண்டு கால புலம்பெயர் வாழ்க்கையில் மூன்றாம் தலைமுறையினர் இங்கு பிறந்து அகதி என்ற அடைமொழியுடன் வளரத் தொடங்கியுள்ளார்கள். ஒரு நாட்டில் பிறக்கும் குழந்தை அந்த நாட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என்று கூறப்படுகிறது. ஆனால்இ அகதிகளுக்கு பிறக்கும் குழந்தைகளின் பிறப்புச் சான்றிலும்இ கல்விச் சான்றிலும் தேசிய நாட்டவர் என்ற இடத்தில் 'இலங்கைத் தமிழ் அகதி' என்றே குறிப்பிடப்பட்டு வருகிறது.

சர்வதேசம் வரையறுத்துள்ள 'அகதிகள்' என்பதற்கான விளக்கக் காரணிகளில் அகதிகளுக்கு பிறக்கும் ஒரு குழந்தை 'பிறப்பாலும் அகதியாகவே கருதப்படுவார்' என்று எங்கும் கூறப்படவில்லை. அப்படி இருக்கையில்இ இங்கு பிறக்கும் ஒரு குழந்தையை அகதி என்று குறிப்பிடுவது எந்த விதத்தில் நியாயம். ஒருவர் தன் பிறப்பால் எப்படி அகதியாக முடியும்? மத்திய அரசின் சட்ட விளக்கப்படி தமிழகத்தில் வாழும் இலங்கைத் தமிழர்கள் சட்டவிரோத குடியேறிகளாக கருதப்படும் நிலையில்இ இங்கு பிறந்தவர்களையும் சட்டவிரோத குடியேறிகளாகவா கையாளப்போகிறது?

பல்வேறு விதமான கேள்விகள் மனதுக்குள் தோன்றி மறையும் இவ்வேளையில்இ 'எரிகிற வீட்டில் பிடுங்கியது வரை லாபம்' என்று சொல்வதுபோல்இ குடியுரிமை வழங்க இங்கு வாய்ப்புகளே இல்லை என்றும்இ இலங்கையில் அமைதி நிலவி விட்டதுஇ அங்கு சென்றால் சுபீட்சமாக அனைவரும் வாழலாம் என்றும்இ வாருங்கள் நாங்கள் உங்களுக்கு அனைத்தையும் செய்து தருகிறோம் என்று சில அமைப்புகள் செய்துவரும் மதிமயக்க வார்த்தைகளை துறவிபோல் தவிர்த்துஇ அவற்றை பொதுபுத்தியில் ஆய்வுக்குட்படுத்திஇ குழந்தைகளின் எதிர்கால நலன் கருதிஇ இங்கேயே தொடர்ந்து வாழ்வது என்று வைராக்கியத்துடன் முடிவெடுத்து வாழும் மக்களின் உணர்வுகளை யாராவது புரிந்துகொள்ள மாட்டார்களா என்ற நீண்ட நாள் கவலையில் ஆழ்ந்திருந்தோம்.

அண்மையில்இ தமிழர்களின் நலன் பேணும் தமிழக அரசு அகதிகள் முகாம்களை 'மறுவாழ்வு முகாம்கள்' என்றும் இலங்கை அகதிகள் என்று குறிப்பிடப்பட்டு வந்தவர்களை 'இலங்கைத் தமிழர்கள்' என்றும் அழைக்க வேண்டும் என்று ஒரு கண்ணியமான அடையாளத்தை நமக்கு கொடுத்திருக்கிறது. குடியிரிமைக்கான சட்ட தீர்வுகள் பற்றி ஆராய சிறப்பு குழுவும் அமைத்துள்ளது நம்பிக்கையை அதிகரித்துள்ளது. அதேவிதத்தில்இ இனிமேல் பிறக்கும் குழந்தைகளின் பிறப்புச் சான்றில் 'இலங்கைத் தமிழர்' என்று குறிப்பிட நடவடிக்கை எடுக்கும் என்றும் நம்புகிறோம். அனைவரது சான்றிதல்களிலும் இந்திய குடிமகன் என்று குறிப்பிடும் படியாக தமிழக அரசு முன்னெடுத்துள்ள தமிழ் நாட்டில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை என்ற நடவடிக்கையில் வெற்றிபெற்று அனைவரின் கனவும் மெய்ப்பட வேண்டும் என்று நம்புகிறோம்.

நீண்டநேர யோசனையில் ஆழ்ந்துஇ கடந்துவந்த சம்பவங்களை மனதில் அசைபோட்டுக்கொண்டு இருக்கும்போதுஇ மீண்டும் என் மகள் என்னிடம் கேட்கிறாள் 'எப்போ அப்பா பள்ளி திறக்கும்? எப்போ நான் பேச்சு போட்டியில் கலந்துகொள்வது என்று'?. பொறுமையாக இருஇ எல்லாம் சரியான நேரத்தில் நடக்கும் என்று எப்படி அவளுக்கு நான் புரிய வைப்பேன்? என்னுடைய கடந்த கால அனுபவங்களின் நீட்சிதான் உன்னுடைய இந்த ஆர்வத்தின் தொடக்கம் என்று!!. வேடிக்கை மனிதர்களாகவே நாம் கடந்து வந்த பாதையில் நீயும் நிராகரிக்கப்படுவதை தடுப்பது காலத்தின் கையிலும் கருணை உள்ளம் கொண்ட இதயங்களின் மனசாட்சிகளிடம் மட்டுமே உள்ளது என்று என் மனதுக்குள் மட்டுமே மௌனமாய் சொல்லி புன்முறுவலை பதிலாக அளிக்கிறேன்..

உலகின் மிகப்பெரிய ஜனநாயகக் குடியரசு நாடு என்ற பெருமையும் உலகிலேயே மிக நீளமான அரசியல் யாப்பைக் கொண்டதுமான அரசியல் சாசனத்தில் குறிப்பிட்டுள்ள அடிப்படை உரிமைகள் நமக்கும் கிடைக்க வேண்டும் என்பதே எங்களது எதிர்பார்ப்பு. அதே அரசியல் சாசனத்தில் குறிப்பிடப்படும் ஒரு குடிமகனுக்கான அடிப்படைக் கடமைகளை நாம் ஒவ்வொருவரும் கடந்த முப்பத்திரண்டு ஆண்டுகளாக மதித்து கடைபிடித்து வருவதை இதற்கான தகுதிகளாக கொண்டு வாய்ப்பளிக்க வேண்டும்.

முடியாட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்த குடியாட்சிஇ அகதிகளுக்கும் வாக்களிக்கும் வாய்ப்பினை தருமா என்பதே அனைவரின் எதிர்பார்ப்பும்.

பாரத மாதாவின் மடியில் தஞ்சம்கோரி அடைக்கலமான எங்களை மனிதாபிமானம் எனும் நீதி தேவதையின் முன் நிறுத்தி தேசிய இனமாக எங்களை அங்கீகரிக்கப் போகிறதா அல்லது தேசிய அவமானமாக தொடர்ந்தும் எங்களை கையாளப்போகிறதா என்பதை காலத்தின் முன்பும் இந்த சமூகத்தின் முன்பும் கேள்விகளாய் முன்வைத்துஇ அனைவருக்கும் இனிய குடியரசு தின நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம் என இவ்வாறு தனது மனக் குமுறலை தெரிவித்தார்.

**ஔவை இலக்கியங்கள் அத்தனையும் ஆய்;ந்து மையக் கருத்துக்களை மனத்தினிலே தேக்கி, வையகமறிந்துய்ய மருந்தாகவே பிழிந்து மரபுக்கவிதை வடிவில் வடித்து தித்திக்க தந்ததனால், மண்முனைப்பற்று இலக்கிய கவிதைப்போட்டியில் முதலாமிடத்தைப் பெற்று, கௌரவ விருதினை தமதாக்கிக் கொண்ட ஆரையூர் அருளின்,**

# ஔவை இலக்கியங்கள் அத்தனையும் ஔடதங்கள்



நல்வழி, மூதுரை, விநாயகரகவல், ஞானக்குறள், ஆத்திசூடி
நறுங் கொன்றை வேந்தன், பந்தனந்தாதி, அசதிக்கோவை
அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை நூலில்
ஐம்பத் தொன்பது செய்யுள்கள் செப்பி நிற்பதும்
வான் புகழ் வள்ளுவர் சகோதரியென வரலாறியம்பும்
வாண்மைமிகு சிந்தனைகள் அறிவு மழையெனப் பெய்யும்
உள்ளங்கை நெல்லிக் கனியாயுணர் வெலாம் கொள்ளும்
உயர் ஔவை இலக்கியங்கள் வாழவழி சொல்லும்.

ஆத்திசூடி நூற்றியெட்டு கொன்றைவேந்தன் தொண்ணூற்றொன்டு
மூதுரைமுப்பது, நல்வழிநாற்பது வழிகாட்டி நிற்பது
ஆடம்பரக்கேடு, அறத்தின்பயன், நன்மைதீமை, நடுவுநிலைமை
வாழ்வின்நிலையாமை, சொல்சோர்வுபடாமை, ஏற்பதிகழ்ச்சி, நீதி
சான்றோர்பெருமை, வறுமையிலும் நேர்மை, கல்விச்சிறப்பு
கோபம் கொள்ளாமை, களவாடாமை, உழவின்மேன்மை
சோம்பல்தவீர், பிச்சைஎடுக்காமை, நட்பின்உயர்வு, ஒழுக்கம்
ஊர்புகழும்படிவாழ், நன்மைசெய்யென நல்வழிப்படுத்தலே.

எண் எழுத்திகழேல் ஏற்பதிகழ்ச்சி என்று, என்றும்
கண்டொன்று சொல்லேல் நன்றி மறவே ளணைத்தும்
உயிர், உயிர்மெய் உற்றுணர்ந்து மிக்க அறிந்து
நிகர் ககர,சகர, தகர,நகர, பகர,மகர வர்க்கம் தெரிந்து
சொர்க்கம் தொட்டிடு சுவையைச் சிறியோர் புரிந்து
முக்காலமும் முழுமனதோடு பயின்று மனம் நிறைக்க
மன்னும் மண்டலத்தில் மதிநலம் பூத்த எங்கள்
அன்னைஔவை ஆத்திசூடி நம்வாழ்வின் கலங்கரை விளக்கம்.

அறம்செய்ய விரும்பு என்றார் ஔவைப்பாட்டி
அமிர்தம்போல் சிறியோர் முதியோர்க் கறிவதூட்டி
நெறிதவறா நீதிவாழ்வை நிதம் நேரில்காட்டி
அறநெறியாமில் விலக்கியங்கள் வாழ்வின் வழிகாட்டி
அத்தனையும் மானிடமுன்னேற்ற நல்வழித் திசைகாட்டி
அறியுள்ளங்கை நெல்லிக்கனியென நெஞ்சில் நிலைநாட்டி
அதிகமா னளித்த நெல்லிக் கனியுடன் தென்பூட்டி
அளித்த தனிப்பாடல த்தனையுமே தனிச்சுவையூட்டி

பௌவியமாகப் பல்லோர் வாழ்விற்கும் வழிவகுத்து
ஔவியமகற்றும் அற்புதங்கள் என்று போற்றும்
திவ்விய செய்யூள்பாடல்கள் அறவாழ்வின் நல்லூற்று
நல்கிடும் நற்கருத்துக்கள் மானிடவிழுமிய நல்நாற்று
அவ்வழி நிற்றல் மானிடவாழ்வைச் செப்பனிடுமெனச்சாற்று
என்றென்றும் பயின்று அதன்வழி நின்றுகாட்டு
வையத்து வாழ்வாங்கு வாழும்நெறி, வழிகூட்டும்
ஔவை இலக்கியங்கள் அத்தனையும் ஔடதங்கள்.

**சொல்லகராதி**
**செப்பி - சொல்லி**
**பௌவியம் - சிறப்பாக, அடக்கமாக**
**ஔவியம் - பொறாமை, தீவினை**
**மன்னும் - நிலைபெறு**
**மண்டலம் - பூமி**




# வாழ்வாதார அபிவிருத்தி வேலைத் திட்டத்தினை மேம்படுத்தும் பயிற்சி நெறியும் காசோலை வழங்கலும்





**(ஹஸ்பர்)**

வாழ்வாதார அபிவிருத்தி வேலைத் திட்டத்தினை மேம்படுத்தும் நோக்கில் பயிற்சிநெறியொன்று தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று (24) இடம் பெற்றது.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் தம்பலகாமம் பிரதேச சமுர்த்தி கிளையின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இச் செயலமர்வில் கால் நடை வளர்ப்பாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல், பொருளாதார அபிவிருத்திக்கு முன்னெடுத்தல் உட்பட பல பயிற்சிகளும் வழங்கப்பட்டதுடன் 35 பயனாளிகளுக்கு 64 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலைகளும் இதன் போது வழங்கி வைக்கப்பட்டன.

சுயதொழில் உற்பத்தி, வாழ்வாதார திட்டத்தை மேம்படுத்தல் வியாபார கைத்தொழில் போன்ற நுட்பங்களை வளர்ச்சி பெறச் செய்தல் உள்ளிட்ட பயிற்சியினை வளவாளராக கலந்து கொண்ட திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐங்கரன் முன்வைத்தார்.

குறித்த நிகழ்வில் தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி, உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சித்திக் மற்றும் பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.